SB TRAVELS AND TOURS (PVT) LTD

தற்போது சென்னை மற்றும் மதுரை ஆகிய நாடுகளுக்கு சென்று வருவதற்கான விமானப் பயணச்சீட்டுக்களை 19.300/=, 22.800/= இருந்து எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
இந்தியா மலேசியா, தாய்லாந்து மற்றும் டுபாய் விசாக்களும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 021 222 8555, 021 222 9555, 076 691 1080, 076 691 1082

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 02 திங்கட்கிழமை 16.07.2018 | கதிர் 252

## டெனிஸ் விடயத்தை ஓட்டிய விசேட விவாதம்:

# இன்று சபையில் ரெலோ விக்கி சார்பாக நிற்கும்!

### அதன் அரசியல் குழு நேற்று முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

டெனிஸ்வரன் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால உத்தரவு சம்பந்தமாக வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு இன்று நடைபெறுகின்றது. அதில் முதல்வர் விக்னேஸ்வரனுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுப்பது என ரெலோ தீர்மானித்திருக்கின்றது. பக்கம் 14 »

## வடக்கு, கிழக்கில் படை முகாம் ஏதும் அகற்றப்படவே மாட்டாது

### அடித்துக் கூறுகின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு,ஜூலை16

வடக்கு, கிழக்கில் எந்தவொரு இராணுவ முகாமும் அகற்றப்படமாட்டாது என இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க பக்கம் 14 »

## அப்பாவைத் தேடித் தாருங்கள்!

### உருக்கமாகக் கேரிய சிறுமியால் கண்ணீரில் நனைந்தது மண்டபம்





கிளிநொச்சி, ஜூலை 16

2009ஆம்ஆண்டுமே மாதம்அருட்தந்தையுடன் சரணடைந்த எனது அப்பாவைத்தேடித்தாருங்கள் எனஒன்பதுவயதுச்சிறுமி உருக்கமாகக் கோரியதால்காணாமற்போனோர் செயலகத்தின் அமர்வில் பங்கேற்ற அனைவரதும் கண்கள் கண்ணீரால் நனைந்தன.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் பக்கம் 14 »

## மாகாண சபை உறுப்பினர் சுகிர்தனின் பெற்றோர் வீட்டில் நேற்றுக் கொள்ளை

### 6 பேர் கொண்ட கும்பல் அதிகாலை கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 16

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனின் பெற்றோர் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் நகை , பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். பக்கம் 14 »

## காணாமற்போனோர் பிரச்சினைக்கு நீதி கிடைப்பதற்குப் பாடுபடுவோம்

### சாலிய பீரிஸ் கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 16

காணாமற்போனோர் செயலகத்தின் பணி ஓரிரு வாரங்களிலோ, ஓரிரு மாதங்களிலோ நிறைவடையாது. நாம் தொடர்ச்சியாக காணாமற்போனோரின் உறவினர்களைச் சந்திப்போம். அவர்களுக்கு நீதி பக்கம் 14 »



## தூக்கிலிட வேண்டிய 18 கைதிகளின் விவரம் நீதி அமைச்சிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 16

போதைப்பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்காகத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட 18 குற்றவாளிகளின் விவரங்களைச் சிறைச்சாலைகள் திணைக்களம், நீதி அமைச்சரிடம் கையளித்துள்ளது.

ஹெரோய்ன் உள்ளிட்ட பக்கம் 14 »

# காணாமற்போனோர் செயலகம் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிரானது

### கிளிநொச்சியில் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்






கிளிநொச்சி, ஜூலை 16

அரசின் காணாமற்போனோர் அலுவலகம் ஜெனீவாத் தீர்மானத்துக்கு எதிரானது. இதன் பக்கம் 14 »

## போதைப்பொருளுக்கு எதிராக அச்சுவேலியில் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூலை 16

போதைப் பொருளை ஒழிக்கவேண்டுமென வலியுறுத்தி போராட்டமொன்று நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

'போதையை ஒழிப்போம்' செயற்திட்டத்திற்கமைய வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஏற் பக்கம் 14 »

### இது ரகசியம் அல்ல!

இப்பத்தியில் எப்போதும்என்கருத்தை மட்டும் பகிர்வது புத்திசாலித்தனமல்ல.

அதனால்இன்றுவித்தியாசமான தகவல். தெற்கின்பிரபல கட்டுரையாளர் ஒருவர் ஓரிரு தினங்களுக்கு முன்னர் வரைந்த கட்டுரையின் ஒரு பகுதியை இன்று இங்கு பகிரலாம் என நினைக்கின்றேன். அது பக்கம் 03 »

## நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்க கூட்டமைப்பின் ஆதரவு தேவை

### கூறுகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, ஜூலை 16

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யவேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்பூரண ஆதரவு வழங்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பி பக்கம் 14 »

# மத்தள விமான நிலையத்துக்காக இந்திய அரசு 32 கோடி 50 லட்சம் டொலரை முதலீடு செய்கிறது

கொழும்பு, ஜூலை 16

மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை கொள்வனவு செய்து, இலங்கை அரசுடன் இணைந்து – இந்தியாவின் விமான நிலைய அதிகார சபை அதனை கூட்டு முயற்சியாக இயக்கவுள்ளது.




இலங்கை அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் 18 சர்வதேச விமான நிலையங்கள், 7 சுங்க விமான நிலையங்கள், 78 உள்நாட்டு விமான நிலையங்கள், 26 இராணுவ ஓடுபாதைகளில் சிவில் போக்குவரத்தை மேற்கொள்ளும் விமான நிலையங்கள் உள்ளிட்ட, 125 விமான நிலையங்களை இந்திய விமான நிலைய அதிகார சபை இயக்கி வருகிறது.

தமது நாட்டுக்கு வெளியே, அனைத்துலக விமான நிலையம் ஒன்றை இந்திய விமான நிலைய அதிகார சபை பொறுப்பேற்கவுள்ளது இதுவே முதல் முறையாகும்.


மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளைக் கொள்வனவு செய்யும் இந்திய விமான நிலைய அதிகாரசபை அதற்காக 32 கோடியே 50 லட்சம் டொலரை முதலீடு செய்யும்.

எஞ்சிய 30 வீதம் இலங்கை சிவில் விமானசேவை அதிகார சபையிடம் இருக்கும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

40 ஆண்டுகள் செல்லுபடியாகும் இந்த உடன்பாட்டின்படி, இந்திய விமான நிலைய அதிகாரசபை, மத்தள விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை பொறுப்பேற்கும். இதில் இந்திய நிறுவனம் ஒன்று ஈடுபடும்.

எனினும், விமானங்களின் பயணங்களையும், வான் பரப்பை பயன்படுத்துவதையும் இலங்கையே கட்டுப்படுத்தும் என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## யாழில் மேலும் 522 ஏக்கர் காணிகளை விடுவிக்கிறது இலங்கை இராணுவம்!



கொழும்பு, ஜூலை 16

யாழ். குடாநாட்டில் மேலும் 522 ஏக்கர் காணிகளை இலங்கை இராணுவம் உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளது என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தகவல் வெளியிட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் இன்னமும், 3100 ஏக்கர் தனியார் காணிகள் மாத்திரம், இலங்கை இராணுவத்தினரின் வசம் உள்ளது என்றும் ஏற்கனவே, 3800 ஏக்கர் காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தனியார் காணிகளில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு, 88 கோடி ரூபாவை, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் இராணுவம் கோரியிருந்தது.

முகாம்களை இடமாற்றம் செய்வதற்காக, கோரப்பட்ட நிதியில் ஒரு பகுதி புனர்வாழ்வு அமைச்சிடம் இருந்து கிடைத்துள்ளது. எஞ்சிய பகுதி நிதியும் விரைவில் கிடைத்து விடும்.

இதனால், கூடிய விரைவில், எஞ்சியுள்ள பெரும்பாலான காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்க முடியும்.

வலிகாமம் வடக்கில், தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக சில காணிகள் இராணுவத்துக்குத் தேவைப்படுகின்றன. இதில் விட்டுக்கொடுப்பு இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் இன்னமும் 4000 ஏக்கர் காணிகள் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக, யாழ். மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் கடந்த வாரம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் பிரதமர் தலைமையில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள்

### ராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தகவல்



யாழ்ப்பாணத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்குரிய தகைமைகளை பூர்த்திசெய்த 457 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதுதொடர்பான நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவிருக்கிறது என கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன், தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் இந்தவிடயத்தை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொண்டர் ஆசிரியர்களுக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்தவர்களுக்கு 2013ம் ஆண்டுக்கு முன்னர், தொடராக மூன்றாண்டுகளுக்கு மேல் கடமையாற்றியவர்களின் சேவைகள் கவனத்திற் கொள்ளப்படும். இதன் அடிப்படையில் எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 457 ஆசிரிய நியமனங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழங்கப்படும்.

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற நிகழ்ச்சித் திட்டத்தையும் துரிதமாக நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகிறது.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் பௌதீக, மனித வள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதியினதும் பிரதமரினதும் ஆலோசனைக்கு அமைய கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### காணாமற்போனோரின் உறவினர்களுக்கு

## பொய்யான வாக்குறுதியை வழங்கி ஏமாற்ற வேண்டாம்: திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஜூலை 16

காணாமற்போனோர் அலுவலகத்தினர் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி காணாமற்போனோரின் உறவினர்களை தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாம் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் –

காணாமற்போனோர் அலுவலகம் கடந்த காலங்களில் பலரது எதிர்ப்புக்களின் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இதுவரை காலமும் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீனமாகவே செயற்பட்டுவருகின்றது. அத்துடன் இதுரை எவ்வித திருப்திகரமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாகவே பாதிக்கப்பட்ட மக்கள் இந்த அலுவலகத்தை புறக்கணிக்க ஆரம்பித்துள்ளனர்.

தற்போது தேசிய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள காணாமற்போனோர் அலுவலகம் முற்றிலும் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது.

அதாவது மேற்குலக அழுத்தங்களின் காரணமாகவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஏனைய ஆணைக்குழுக்களை விட அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே காணாமற்போனோர் அலுவலகத்தினர் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உறவுகளின் உணர்வுகளை கேலிக்கூத்தாக்க வேண்டாம். பாதிக்கப்பட்ட மக்கள் நியாயங்களை வேண்டி நிற்பது ஏற்றுக் கொள்ள கூடியது. எனவே பொய்யான வாக்குறுதிகளை குறிப்பிட்டு காணாமற்போனோரின் உறவினர்களை தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

## அரச பாதுகாப்பிற்காக இராணுவத்தை ஈடுபடுத்தும் முழுமையான அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு!

### அமைச்சர் சரத் அனுமுகம தெரிவிப்பு

அரச பாதுகாப்பிற்காக இராணுவத்தை ஈடுபடுத்தும் முழுமையான அதிகாரம் அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதிக்கு இருக்கிறது என அமைச்சர் கலாநிதி சரத் அனுமுகம தெரிவித்துள்ளார்.

இதனால் இராணுவம் அல்லது அரச அதிகாரிகள் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரம் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்புக்கு அமைவாக, பாதுகாப்புப் பிரிவு ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்திற்கு உட்பட்டதாகும். இந்த விடயம் அரசமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். தேசிய அடிப்படை கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசமைப்புதிருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகும். இதற்கான அதிகாரங்களை வழங்குவதற்கு தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களும் எனக்கு வாக்களிப்பார்கள்: கோட்டாபய

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடத் தயாராக இருக்கிறேன். தமிழர்களும் எனக்கு வாக்களிப்பார்கள் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தினால், நான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன். எனது சகோதரர் பஸில் ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களும் கூட இந்தமுறை எனக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறேன். நான் பொதுபலசேனாவின் ஆதரவாளர் என்ற தவறான கருத்து இப்போது பொய்யாகியுள்ளது.

எனவே, முஸ்லிம்கள் எனக்கு வாக்களிப்பார்கள். மஹிந்த ராஜபக்ஷவுக்காக தமிழ் மக்கள் எனக்கு வாக்களிப்பார்கள். நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டால், ஒவ்வொரு குடிமகனும், அமைதியாகவும், கௌரவமாகவும் வாழுகின்ற நிலையை உறுதி செய்வேன்.

தமிழர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்ப வட்டத்துக்குள் தமிழ் உறவுகளைக் கொண்டிருக்கிறார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் அவர் வடக்கு, கிழக்கில் முக்கியமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# குரோஷியாவை 4 - 2 கணக்கில் வீழ்த்தி உலகக் கிண்ண சாம்பியனானது பிரான்ஸ்




மொஸ்கோவில் நேற்றிரவு நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்துத் தொடரில் இறுதியாட்டத்தில் குரோஷியாவை 4 - 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெற்றிவாகை சூடியது பிரான்ஸ்.

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி நேற்றிரவு 8.30 மணிக்கு தொடங்கியது.

இதில் பிரான்ஸ் – குரோஷியா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதல்பாதிநேரத்தில்பிரான்ஸ் 2 - 1 என முன்னிலைப் பெற்றது. 2 ஆவது பாதி நேரம் ஆட்டம் தொடங்கியதும் இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமான ஆட் டத்தை வெளிப்படுத்தினார்கள். இதனால் ஆட்டத்தில் அனல் பறந்தது.

48 ஆவது நிமிடத்தில் குரோஷிய வீரர் அடித்த பந்தை பிரான்ஸ் கோல்கீப்பர் லோரிஸ் அபாரமாகத் தடுத்தார். ஒரு கோல் முன்னிலை பெற்றாலும் பிரான்ஸ் தடுப்பு ஆட்டத்தில் ஈடுபடவில்லை. தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தியது. குரோஷிய வீரர்கள் ஒரு வினாடியைக் கூட வீணடிக்காமல் பந்தை கடத்தும் நோக்கத்தில் ஈடுபட்டு வந்தனர்.





59ஆவதுநிமிடத்தில்போக்பா ஒரு கோல் அடித்தார். பிரான்ஸ் எல்லை அருகில் இருந்து அடித்த பந்து குரோஷியாவின் வலதுமூலைப்பக்கம்சென்றது. மப்பே புயல்வேகத்தில் சென்று பந்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கோல் எல்லைக்குள் வைத்து கிரிஸ்மானிடம் பாஸ் செய்தார். கிரிஸ்மான் அருகில் நின்ற போக்பாவிடம் கடத்தினார். அவர் புயல் வேகத்தில்அடித்தார். பந்துகுரோஷியா காப்புவீரர் மீது பட்டு மீண்டும் போக்பாவிடம் வந்தது. அவர் இடதுகாலால்உதைத்துஅதைக் கோலாக்கினார். இதனால் பிரான்ஸ்3-1எனமுன்னிலைப் பெற்றது.

65 ஆவது நிமிடத்தில் ஹெர்னாண்டஸ் கொடுத்த பாஸை மப்பே அபாரமாகக் கோலாக்கினார். இதனார் பிரான்ஸ் 4-1 என முன்னிலைப் பெற்றது.

69 ஆவது நிமிடத்தில் பிரான்ஸிற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. பிரான்ஸ் கோல் எல்லைக் கோட்டிற்குள் வைத்து பிரான்ஸ் வீரர் பாதுகாப்பாக கோல் கீப்பர் லோரிஸிடம் பந்தை அடித்தார். அதை லோரிஸ் அஜாக்கிரதையாக திருப்பி அடிக்க முயன்றார். அப்போது அருகில் நின்ற குரோஷியா வீரர் மாண்ட்சுகிச் மீது பட்டு அது கோல் கம்பத்திற்குள் புகுந்தது. இதனால் குரோஷியா இரண்டு கோல் அடித்தது. பிரான்ஸ்முன்னிலை 4 - 2 எனக் குறைந்தது.

அதன்பின் எவ்வளவு போராடியும் குரோஷியாவால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் பிரான்ஸ் 4- 2 என குரோஷியாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

(மேலும் படங்கள் 16 ஆம் பக்கத்தில்)



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

*அது மிகப் பரபப்பான செய்தி. ஆனால்அமுக்கிவாசிக்கப்பட்டது.*

*இரத்தினபுரியில் ஒரு விகாரையில் பிரதமகுரு ஒரு பொலிஸ் சார்ஜண்டைக் கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கின்றார். பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளான அந்தத் துறவி தலைமறைவாகியிருந்தார். அவருக்கான அழைப்பாணையை வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட சார்ஜண்ட் அந்த விஹாரைக்குச்சென்றிருந்தார். துறவி ஒருவரைச் சந்திப்பதற்கு - அதுவும் விஹாரையில் அவரைச் சந்திப்பதற்கு - என்பதால் நிராயுதபாணியாகத் தனித்து அங்கு சென்றிருந்தார் அவர்.*

*சார்ஜண்டின் அவலக் குரல் கேட்டு எச்சரிக்கை அடைந்த அயலவர்கள் '119'க்கு அழைப்பு எடுத்தனர். பொலிஸ் அணி ஒன்று விரைந்து வந்த போது அந்தத் துறவி அவர்களை 'கிரனேட்' குண்டு எறிந்து வரவேற்றார்.*

*இந்தச் சம்பவம் ஒரு கோவிலில் அல்லது பள்ளிவாசலில் அல்லது தேவாலயத்தில் இடம்பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? இந்து அல்லது முஸ்லிம் அல்லது கிறிஸ்தவ மதகுரு ஒருவர் தனது கையால் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரைக் கையாண்டு கொலை செய்திருந்தால் அல்லது பொலிஸ் அணி மீது கிரனேட் வீசித் தாக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்? எங்கள் ஊடகங்கள் அடுத்த பல வாரங்களுக்கு வேறு எது பற்றியுமே பேசியிருக்கமாட்டா.*

*அரசியல்வாதிகள் - குறிப்பாகத் தம்மைத் தேசப்பற்றுள்ளவர்களாகப் பீற்றிக் கொள்பவர்கள் - புலிகளோ, இஸ்லாமியத் தீவிரவாதிகளோ, கிறிஸ்தவ சதியாளர்களோ மீளெழுச்சி கொண்டு விட்டனர் என அலறத் தொடங்கியிருப்பார்கள். எப்படி அவர்கள் கிரனேட்டை சுவீகரித்தார்கள், அதனால் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு எத்தகைய அச்சுறுத்தல் என்பன பற்றியெல்லாம்சத்தமிட்டிருப்பார்கள்.*

*ஆனால், இங்கே குற்றத்தை இழைத்த துறவி ஒரு குற்றவாளியாக மட்டுமே பார்க்கப்பட்டார். அதனால் அது பற்றிய செய்தியறிக்கைகள் மழுங்கடிப்பட்டன. எச்சரிக்கை அலறல்களோ, கண்டனக் குரல்களோ கூட எழவில்லை.*

*நாட்டின் மதச்சார்பின்மை பற்றிய விடயங்களில் தங்கள் தகுதி, திறமை ஆகியவற்றை மீறி எப்போதுமே தலையிடுவதைத் தமது வழக்கமான விடயமாகக் கொண்டிருக்கும் மத பீடத்தின் பிரதம தலைமைகள் இந்தப் பயங்கரச் சம்பவம் குறித்து இன்னமும் ஒரு வார்த்தை கூட வாய்திறக்கவில்லை. அதுவே, பௌத்த - சிங்கள மதத் துறவுத் தன்மையின் தற்போதைய நிலைமை யாது என்பதை எங்களுக்கு சமிக்ஞை காட்டுகின்றது.*

- இப்படி எழுதியிருக்கின்றார் அந்தக் கட்டுரையாளர். அதில் ஏதோ ஒரு நியாயமும் இருப்பதாக எனக்குப்படுகின்றது. உங்களுக்கும் அப்படித் தோன்றுகின்றதா?

-மின்னல் -

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## காணாமல்போனோருக்கான அலுவலகம் தன் அதிகாரத்தை பகிரங்கப்படுத்துமா?

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம் ஆயுத முனையில் அடக்கப்பட்டு சுமார் பத்தாண்டுகள் ஆகுகின்றன.

யுத்தம் விட்டுச் சென்ற கோர வடுக்களில் இருந்து தமிழர் தாயகம் இன்னும் மீளவில்லை.

பொதுமக்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை, தமிழர் தாயகம் இராணுவ மயமாக்கப்பட்டிருக்கின்றமை, அரசியல் கைதிகள் விவகாரம், மீள் குடியேற்றம் மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படாமை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, தமிழர் தாயகத்தை சிங்கள மயப்படுத்தும் விதத்திலான திட்டமிட்ட குடியேற்றங்கள், மத ஆக்கிரமிப்பு எத்தனங்கள் என்று இந்தச் சிக்கல்களின் பட்டியல் நீண்டது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டியும் தமக்கு நீதி கோரியும் பாதிக்கப்பட்ட மக்கள் வீதியில் இறங்கி நேரடியாகப் போராடி வருகின்றார்கள்.

வெயிலிலும், மழையிலும், குளிரிலும் நெருக்கடியை எதிர்கொண்டபடி ஒன்றரை வருடங்களுக்கு மேல் போராடும் அந்த மக்களின் அவலக் குரல் யார் காதிலும் விழுவதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகளின் காலத்தில் துப்பாக்கிச் சத்தங்களும், குண்டு வெடிப்பு அதிர்வுகளும் மோசமாக எதிரொலித்த போது தமிழர்களின் உரிமைக் குரல் சர்வதேசத்தின் காதுகளில் சத்தமாக கேட்டது. ஆனால் அவை அடங்கிய பின்னர் அந்த மக்களின் அவலம் யாரின் செவியிலும் ஏறாமல் போய் விட்டது என்பதுதான் வேதனை.

யுத்தம் முடிவுற்ற பின்னர், ஆக்கிரமிக்கப்பட்ட காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம் போன்ற மற்றைய பிரச்சினைகளில் சிறிய, சிறிய அளவு முன்னேற்றங்களும் நகர்வுகளும் இருந்த போதிலும், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழ் மக்களின் விடயத்தில் கிஞ்சித்தும் முன்னேற்றம் ஏற்படவேயில்லை.

காணாமல் போனோர் அலுவலகம் என்ற கட்டமைப்பும் அதற்கான சட்ட மூலமும், நீண்ட பல வருட இழுபறிக்குப் பின்னர் செயற்பாட்டுக்கு வந்திருக்கின்றமையை அரசும், அரசுத் தரப்புடன் சேர்ந்தியங்கும் சில மனித உரிமை ஆர்வலர்களும் பெரும் முன்னேற்றமாகவும், சாதனையாகவும் காட்ட முயன்றாலும் கூட, பாதிக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அலையும் இரத்த பந்தங்களுக்கு – இது வெறும் ஏட்டுச் சுரைக்காயன்றி வேறில்லை.

அதனால்தான், அந்த அலுவலகம் தமிழர் தாயகத்தில் நடத்தும் அமர்வுகளுக்கு எதிராக பதிக்கப்பட்ட மக்கள் இவ்வளவு தூரம் எதிர்ப்புப் போரட்டங்களை நடத்துகின்றார்கள்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள இந்த உறவுகள், அவர்கள் காணாமலாக்கப்பட்டதனால் மன உளைச்சலுக்கும் பிற பாதிப்புக்களும் உள்ளாகியிருக்கின்றனர் என்பது உண்மையே.

அந்தப் பாதிப்புக்களுக்கான நிவாரணம், நஷ்ட ஈடு, வாழ்வியல் ஊக்குவிப்பு என்பன வழங்கப்பட வேண்டும என்பதெல்லாம் கூட உண்மைதான்.

ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி, அந்த மக்களுக்கு இன்னொரு பிரதான அம்சம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது.

அது நிவாரணமோ, நஷ்ட ஈடோ, ஊக்குவிப்போ அல்ல.

தங்களின் இரத்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டு, உண்மை அம்பலப்படுத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் சரியாக நிலைநிறுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் தான் மற்றெல்லாம்.

இப்போது களத்துக்கு வந்திருக்கும் காணாமல் போனோரைத் தேடிக் கண்டறியும் அலுவலகம் கூட, இந்தப் பிரதான விடயத்தைத் தவிர்த்து ஏனைய விவகாரங்களைத்தான் கையாள்கின்றது, கையாளப் போகின்றது என்ற நியாயமான – பலத்த – சந்தேகம், அந்தப் போராட்டம் நடத்தும் உறவுகளுக்கும் – ஏன் நமக்கும் – அனைத்துத் தமிழ் மக்களுக்கும் – தொடர்ந்து நீடிக்கவே செய்கின்றது.

சம்பந்தப்பட்ட அலுவலகத்தின் தலைவர் "பாரபட்சமற்ற விசாரணை நடத்துவோம்" – என்று மேம்போக்காகக் கூறிச் சமாளிக்க முடியாது.

காணாமல்போனோர் விடயத்தில் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலையும் நீதியையும் நிலைநாட்டுவதில் தமக்குரிய அதிகாரங்கள், வலிமை, தங்களின் பற்றுறுதி, திடசங்கற்பம் எல்லாவற்றையும் முதலில் அவர் பகிரங்கப் படுத்த வேண்டும். அதற்கு அவர் தயாரா?

## மஹிந்தவுக்கு சீனா பணம் வழங்கியமை சம்பந்தமான விவரங்கள் அடுத்த வாரம் வெளியிடப்படும்: ஜே.வி.பி.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சீனா வழங்கிய பணம் தொடர்பான சகல தகவல்களையும் அடுத்த வாரம் வெளியிடப் போகிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மகரகமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்கு சீன, நிறுவனம் வழங்கிய 7.6 மில்லியன் அமெரிக்க டொலர் தொடர்பான தகவல்கள் ஆவணங்களுடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்திற்கு சீன நிறுவனம் 7.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதாக அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

இது சம்பந்தமான நாடாளுமன்ற ஒத்திவைப்பு விவாதம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவுள்ளது.

## ரோம் நகரை அடைந்தார் ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் உணவு விவசாய நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 6 ஆவது உலக வன வாரத்தை முன்னிட்டு இடம்பெறும் மாநாடு மற்றும் உலக வனப் பாதுகாப்பு குழுவின் 24 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக ரோம் பயணித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரோம் பியுமிசினோ விமான நிலையத்தை நேற்றுச் சென்றடைந்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ரோம் சென்றடைந்த ஜனாதிபதியையும் 20 பேர் அடங்கிய தூதுக் குழுவினரையும் அந் நாட்டின் விசேட பிரதிநிதிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய நிறுவனமானது பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வனங்களின் பங்களிப்பை அதிகரிப்பதை நோக்காக கொண்டே இந்த மாநாட்டிடை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாநாட்டின் கூட்டத் தொடரின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் டிலானுக்கு மனநோய்: அமைச்சர் பழனி திகாம்பரம் சாடுகிறார்

முன்னாள் அமைச்சர் டிலான் பெரேராவுக்கு மூளையில் கோளாறு ஏற்பட்டுள்ளது என மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் சாடியுள்ளார்.

இந்திய அரசின் நிதி உதவியோடு மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு ஊடாக பெருந்தோட்ட பகுதி மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளில் நேற்று 155 வீடுகளுக்கான அடிக்கல் நடும் விழா இடம்பெற்றது.

இதில் முதலாவதாக அக்கரப்பத்தனை வெவர்லி தோட்டம் போட்மோர் பிரிவில் 80 வீடுகளுக்கு அடிக்கல் நட்டு வைத்து மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தோட்ட தொழிலாளர்கள் தொடர்பில் இரண்டு வருடங்களுக்கு முன் செய்து கொள்ளப் பட்ட கூட்டு ஒப்பந்தத்தை திகாம்பரம் தான் காட்டிக் கொடுத்தார் என இ.தொ.காவுடன் கூட்டணி சேர்ந்துக் கொண்டு எம்மீது சேறு பூசுகின்றனர்.

நான் ஒரு காலமும் தொழிலாளர்களை காட்டிக் கொடுக்க போவதில்லை. காட்டிக் கொடுக்கவும் மாட்டேன். இம்முறை ஆயிரம் ரூபாய்க்கு மேலதிகமாக சம்பளத்தை பெற்றுக் கொடுப்பவர்கள் என்றால் அவர்களை மாலை இட்டு வரவேற்கும் அதேவேளை இம்முறையும் தொழிலாளர்களை காட்டிக் கொடுப்பார்கள் என்றால் தொழிலாளர் தேசிய சங்கம் அதன் அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டு வீதியில் இறங்கி போராடும்.

முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தான் காட்டிக் கொடுத்தவர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்த போது மஹிந்த ராஜபக்ஷவை காட்டிக் கொடுத்தவர். மஹிந்தவிடம் இருக்கும் பொழுது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையையும் காட்டிக் கொடுத்தார்.

அதேபோன்று மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து கொண்டு மஹிந்த ராஜபக்ஷவை காட்டிக் கொடுக்கும் இவர் எவரையோ 2020இல் பிரதமராக்குவோம் என ஒருவர் ஒருவரை காட்டிக் கொடுத்து வருகின்றார்.

முன்னாள் அமைச்சர் டிலான் பெரேராவுக்கு மூளையில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இவர் அங்கொடை மனநோயாளி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டும்.

ஆனால் நான் சொல்லுகிறேன். 2020இல் முன்னாள் அமைச்சர் என்ற பதவியை கூட இழப்பார் என்று ரோகித்த அபேவர்தன அமைச்சர் சொல்வதை போல் இவர் தேசிய பட்டியல் ஆசனத்தையும் இழப்பார். ஆனால் 2020இல் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவே பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதை உறுதியாக தெரிவிக்கின்றேன்.

கடந்த கால கூட்டு ஒப்பந்தத்தின் போது 1000 ரூபாவை சம்பளமாக வாங்கி தருவதாக தம்பட்டம் அடித்தவர்கள் கடைசியில் காட்டிக்கொடுத்து விட்டு முழு பொறுப்பையும் என் மீது திணித்து விட்டார்கள்.

காட்டிக் கொடுத்தவர்கள் யார் என்று மக்கள் நன்கு அறிவார்கள். நான் உங்களின் ஒருவன் இந்தியாவிலிருந்து பிறந்து வரவில்லை. மடக்கும்புர தோட்டத்தில் லயத்தில் பிறந்து தொழிலாளியின் பிள்ளையாக அரசியல் செய்கின்றேன். நான் தொழிலாளர்களின் கஷ்ட, நஷ்டங்களை நன்கு அறிந்தவன்.

நான் ஒரு காலமும் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்தவன் அல்லன். என்னால் முடிந்ததை முழுமையாக செய்து முடிப்பேன். மக்களின் சந்தாவிலோ அல்லது ஒதுக்கப்படும் நிதியிலோ சுகபோக வாழ்க்கை வாழ்பவனும் அல்லன். யார் எதை சொன்னாலும் என்னுடைய வேலையை செய்து கொண்டிருக்கின்றேன். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### நாளை

17.07.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : பூரம் பி.ப 3.26 வரை
திதி : பஞ்சமி மு.இ 10.20 வரை
சுபநேரம் : 10.30 – 12.00 வரை
இராகுகாலம் : 3.00 – 4.30 வரை

# ஹிட்லர் ஒருவர் ஆட்சிக்கு வந்தால் நாடு எந்த திசையை நோக்கிச் செல்லும்?

## கேள்வி எழுப்புகிறார் குமார வெல்கம எம்.பி.



கொழும்பு, ஜூலை 16

நாட்டின் தெற்கில் ஹிட்லர் ஒருவர் ஆட்சிக்கு வந்தால், நாடு எந்த திசையை நோக்கிச் செல்லும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கேள்வி எழுப்பியுள்ளார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

விஜயகலா வடக்கிற்கு சென்று எமக்கு பிரபாகரன் தேவை என்கிறார். பிரபாகரன் ஜனநாயக தலைவரா?. பிரபாகரன் என்பவர் சர்வாதிகாரி. அதேபோல் தெற்கில் உள்ள தமக்கு ஹிட்லர் ஒருவர் வேண்டும் என்கின்றனர்.

வடக்கில் சர்வாதிகாரி ஒருவரை கோருகின்றனர். தெற்கில் ஹிட்லர் ஒருவரை கோருகின்றனர். இப்படி நடந்தால், நாடு எந்த திசையில் பயணிக்கும். அப்படி நடந்தால், மக்களுக்கு வாழ முடியுமா?. இரவில் நித்திரை கொள்ள முடியுமா?.

அன்று அந்த இரண்டு அரசாங்கங்களையும் விமர்சித்தால் இரவில் நித்திரை கொள்ள முடியாது.

கிராமத்தில் இருந்த மகனுக்கு என்ன நடந்தது என்பது ஊர் பொலிஸாருக்கும் தெரியாது. இதனால், நாங்கள் சர்வாதிகார ஆட்சியை விரும்பவில்லை என குமாரவெல்கம குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, குமாரவெல்கமவை அரசு பயமுறுத்தி, தனக்கு தேவையான வகையில் பயன்படுத்துவதாக, கோட்டாபய ராஜபக்ஷவின் பேச்சாளராக செயற்பட்டு வரும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் அஜித் பிரசன்ன அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள குமார வெல்கம, அஜித்பிரசன்ன ஒரு பைத்தியகாரன் என விமர்சித்துள்ளார்.

அஜித் பிரசன்னவுக்கு பதிலளிக்கும் தேவை எனக்கில்லை. 5 ஆயிரம் வாக்குகளை கூட பெற முடியாத முழு நாடும் அறிந்த பைத்தியகாரன். பைத்தியகாரனுடன் நான் ஏன் பேச வேண்டும் என குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

## கிரிவெஹர விகாராதிபதியின் வைத்தியச் செலவை அரசு பொறுப்பேற்பு

கொழும்பு, ஜூலை 16

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கதிர்காமம் கிரிவெஹர விகாராதிபதி வண கொபவக தம்மிந்த தேரரின் வைத்தியசாலைக் கட்டணத்தின் ஒரு பகுதியை அரசு செலுத்தியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி நிதியத்தினால் 10 லட்சம் ரூபா நிதி இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையையும் அரசு பொறுப்பேற்கும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

தேரரின் வைத்தியசாலைக் கட்டணமாக சுமார் 30 லட்சம் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காஸ் சிலிண்டரை திருடியவர் கைது

திருகோணமலை, ஜூலை 16

திருகோணமலை – உப்புவெளி பகுதியிலுள்ள வீட்டிற்குள் அத்துமீறி புகுந்து கேஸ் சிலிண்டரை திருடிச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வரோதய நகர் பகுதியை சேர்ந்த 22 வயது இளைஞரே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேகநபர் வீட்டில் சமையல் அறையில் யாருமில்லாத நேரத்தில் காஸ் சிலிண்டரை தூக்கிச் செல்லும் போது அயலவர் ஒருவர் கண்டுள்ளார்.

அவர் உடனே கூக்குரலிட்ட நிலையில் அப்பகுதி மக்கள் சேர்ந்து சந்தேகநபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரை தடுத்து வைத்துள்ளதோடு, அவருக்கு எதிரான திருட்டு வழக்குகள் ஏற்கனவே நடைபெற்று வருகிறது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வாகன விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழப்பு

அநுராதபுரம், செப்புக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.20 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையும் மகனும் பலியாகியுள்ளனர்.


நேற்றுமுன்தினம் மாலை ஹொரவபத்தான பகுதியில் உள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் மகன் ஆகியோர் அவர்களது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது பாதை ஓரத்தில் இருந்த மின் கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மூவரும் மிஹிந்தல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் தந்தையும் மகனும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

ஹொரவபத்தான பகுதியைச் சேர்ந்த 8 வயதுடைய மகனும் 41 வயதுடைய தந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஹொரவபத்தான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய வெளியுறவுத்துறை செயலருடன் தமிழ் முற்போக்கு கூட்டணி சந்திப்பு




கொழும்பு, ஜூலை 16

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விஜய் கேசவ் கோகலேவுக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பு இந்திய தூதரகத்தில் இடம்பெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் அதன் தலைவர் அமைச்சர் மனோ கணேசன், பிரதித்தலைவர்கள் அமைச்சர் திகாம்பரம் ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், கூட்டணியின் செயலாளர் நாயகம் சந்திராப்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செயலாளர் கேசவ் கோகலே இ.தொ.காவுடனும் சந்திப்பு



கொழும்பு, ஜூலை 16

இந்திய வெளிவிவகார செயலாளர் விஜய் கேசவ் கோகலேவுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது இந்திய அரசால் இலங்கைப் பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு, கல்வி உட்பட அபிவிருத்திக்கு வழங்கி வரும் உதவிக்கு இதன்போது இ.தொ.கா. நன்றி தெரிவிக்கிறது என குழுவினர் குறிப்பிட்டனர்.

அத்துடன், எதிர்காலத்திலும் வீடமைப்பு தொடக்கம் கல்வி வரை யிலான அபிவிருத்திக்கு, இந்திய அரசு பூரண ஒத்துழைப்பை வழங்குமென, இந்திய வெளி விவகார செயலாளர் விஜய் கேசவ் கோகலே தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத கள்ளு போத்தல்களுடன் ஒருவர் கைது!

சட்டவிரோதமான முறையில் 2 கொள்கலன்களில் எடுத்துச் செல்லப்பட்ட சுமார் 46 கள்ளு போத்தல்களுடன் சந்தேக நபர் ஒருவரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள குமாரவேலியார் கிராமத்தில் மேற்கொண்ட சோதனையிலேயே இந்தக் கொள்கலன்கள் சிக்கியுள்ளன.

சைக்கிளில் இரு பக்கமும் குடிதண்ணீர் கலன்கள் காவிச் செல்வது போன்று இவை கட்டப்பட்டிருந்த நிலையில் 2 கொள்கலன்களிலும் சுமார் 46 போத்தல்கள் கொண்டகள் இருந்தது என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயினுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு – வெள்ளவத்தை, களுபோவில பகுதியில் வைத்து ஹெரோயினுடன் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த இந்த இளைஞர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவரிடமிருந்து ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸை பகுதியைச் சேர்ந்த 28 வயதான நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சந்தேகநபரிடமிருந்து 100 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 16

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

ஆனந்தபுரத்திலிருந்து இரணைமடு வரை, கிளிநொச்சி வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், கொக்கெலிய இராணுவமுகாம் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்-**

மடுச்சந்தியிலிருந்து பூமலர்ந்தான் வரை, எழுதூரிலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத்தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், Palmyra house, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Lourdes ஐஸ் தொழிற்சாலை, மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# போலி நாணயத் தாள்களுடன் கடற்படைச் சிப்பாய் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 16

மதவாச்சி, பூனாவ பகுதியில் மூன்று, போலி நாணயத்தாள்களுடன் கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மின் உபகரண விற்பனை நிலையம் ஒன்றில் ஒரு 5000 ரூபா மற்றும் இரண்டு 1000 ரூபா போலி நாணயத்தாள்களை வழங்கிப் பொருள்களை கொள்வனவு செய்ய முயற்சித்த போது, கடை உரிமையாளரால் அந்த நாணயத்தாள்கள் போலியானவை என்பது கண்டுபிடிக்கப்பட்டு மதவாச்சிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். 28 வயதுடைய ராஜாங்கனைப் பிரதேசத்தைச் சேர்ந்த அவர் அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளார். (ஐ)

# எரிபொருள் விலையுயர்வை மக்களுக்காகவே எதிர்த்தேன்

## கூறுகிறார் அமைச்சர் அர்ஜுன்

கொழும்பு, ஜூலை 16

நான் மக்களுக்காகவே எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்தேன். அத்தோடு எரிபொருளுக்கான வரியைக் குறைத்தால் எம்மால் எரிபொருளின் விலையைக் குறைக்க முடியும் எனப் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கனேமுல்லவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ நினைவுச் சின்னத்தை திறந்துவைக்கும் விழாவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் பொதுமக்களை தவிர்த்து எரிபொருள் விலை அதிகரிக்கும் தீர்மானத்திற்கு வரக்கூடாது. நாம் எரிபொருள் விலையை அதிகரிக்கத் தீர்மானம் எடுக்கும்போது பொது மக்களைக் கவனத்திற் கொண்டு தீர்மானங்களை எடுக்கவேண்டும். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொது மக்களுக்குச் சேவை வழங்கும் நிறுவனமாக இருக்கவேண்டுமே தவிர இலாப மீட்டும் நோக்குடன் செயற்படக்கூடாது.

கடந்த தினத்தில் அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலை தொடர்பாக எனக்கு எவ்வித உடன்பாடும் இல்லை. அதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் மக்களை மனதில் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

உண்மையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எவ்வித நட்டமும் இல்லை. எண்ணெய் விநியோகத்தில். எரிபொருளுக்கான வரியை குறைத்தால் எங்களால் குறைந்த விலையில் எரிபொருளை விநியோகிக்க முடியும்.

வரியை குறைத்தால் எண்ணெய் விலையும் குறையும். ஆனால் வரியையும் குறைக்க முடியாது. காரணம் அரசின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் வரியிலேயே தங்கியுள்ளன. அமைச்சரவையும் விருப்பமின்றியே எரிபொருள் விலையை அதிகரிக்க சம்மதித்தது - என்றார். (ஐ)

# தினசரி ராசி பலன் (16.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 32 ஆம் நாள் திங்கட்கிழமை சதுர்த்தித்திதி மாலை 6.41 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: மகம் பகல் 11.12 வரை பின்னர் பூரம். மரண யோகம் பகல் 11.12 வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 12.01 மணி முதல் 1.31 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.33 மணி முதல் 9.07 மணி வரை.

இன்று சதுர்த்தி விரதம்.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - மகம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணவரவு தாராளமாக இருக்கும். சுய வேலை வாய்ப்பு நன்மையையும், வேலை தேடுபவர்களுக்கு வேலையும் கிட்டும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஆதரவு நற்பயனைத் தரும்.

**ரிஷபம்** சஞ்சலமான நாள். திடீர் விரய செலவு வந்து பணப் பற்றாக்குறை இருக்கும். பெண்களின் வாழ்க்கையில் சில தடை வந்து மறையும். சிலருக்கு உடல் நலக் குறைவு உண்டாகும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை ஓரளவு சீராக இருக்கும். கூடுதல் முதலீடு, புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. கொடுக்கல், வாங்கல் சுமாரான லாபம் தரும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப ஒற்றமை பலப்படும். உத்தியோகத்தர்கள் பணியில் சிறந்தவராக பாராட்டும்படி செயற்படுவார்கள்.

**சிம்மம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். பெண்களுக்கு திருமண வாய்ப்புக்கள் அமையும். தொழிலில் உயர்வு கிட்டும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும்.

**கன்னி** யோசனையான நாள். பொருள் வரவு குறையும். செய்யும் தொழிலில் கவனமுடன் செயற்படுவது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த வெளிநாட்டு ஒப்பந்தம் தாமதமாகும்.

**துலாம்** உயர்வான நாள். பொருறளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப ஒற்றுமை மேம்படும். சகோதர உறவு பலப்படும். தொழிலில் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் பெறுவார்கள். சுய தொழில் வளர்ச்சியைத் தரும்.

**விருச்சிகம்** மத்திமமான நாள். பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதிக்கம் அதிகரிக்கும். பணிகளில் கட்டாய செயற்பாடுகளுக்கு உட்படுத்துவார்கள்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக அமையும். அந்நிய நாட்டுத் தொடர்புகள் ஆதாயம் தரும். விடுபட்ட பல காரியங்கள் கைகூடும்.

**மகரம்** துன்பமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். மன ரீதியான குழப்பங்களும் எதையும் துரிதமாக செய்ய முடியாத நிலையும், கடன்படும் நிலையும் உண்டாகும்.

**கும்பம்** மத்திமமான நாள். பொருளாதாரம் சம நிலையில் இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரப் போட்டிகள் இருந்தாலும் அதை எளிதில் சமாளிப்பார்கள். உடல் நலனில் குறைபாடு உண்டாகும்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும். வியாபாரிகளின் தொழில் திறமையும், பேச்சால் வாடிக்கையாளர்களிடம் பேசி விருத்தி செய்து கொள்வார்கள். சகோதர உறவு வலுவடையும்.

**சந்திராஷ்டம நாள்; உத்தாடம் 2ஆம், 3ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## மன்னார் நகரில் கடந்த வெள்ளியன்று

# மாற்றாற்றல் கொண்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றிய விளையாட்டுப் போட்டிகள்














மன்னார் மாவட்டத்தில் மன்னார், நானாட்டான், மடு, மாந்தை மேற்கு மற்றும் முசலி ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மாற்றாற்றல் உள்ளோருக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள், சமூகசேவை திணைக்களம், சமூக நலன்புரி மற்றும் கைத்தொழில் அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்றன.

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இருந்து 150 இற்கு மேற்பட்ட மாற்றாற்றல் கொண்ட ஆண் பெண் அகிய இரு பாலாரும் ஐம்பது விதமான இவ் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எம்.செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டு போட்டி நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ.மோகன்ராஸ் பிரதம விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலா ளர் எம்.பரமதாஸன், முசலி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், நானாட்டான் பிரதேச செயலாளர் எம்.ஸ்ரீஸ்காந்தகுமார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் ஆகியோரும் வேறு பலர் கலந்து கொண்டனர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய அணைத்து வீரர், வீராங்கனைகளுக்கும் பணப் பரிசுகள் வழங்கப்பட்டன.


இதில் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் தேசிய மட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குப்பற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-112)

## மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ்

# புதிய உடனடி அபராத விதிப்பு நேற்று முதல் அமுலுக்கு வந்தது

கொழும்பு, ஜூலை 16

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ், புதிய உடனடி அபராத விதிப்பு (Spot fine), நேற்று முதல் அமுலாவதோடு, அது தொடர்பில் ஏற்கனவே இருந்த 23 விதி மீறல்களில் ஒரு சில நீக்கப்பட்டு, மேலும் 14 விதி மீறல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனஎன பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்துள்ள்ார்.



மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட, 2017 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க திருத்தத்திற்கு அமைய வெளியிடப்பட்டுள்ள, 2018 ஜனவரி 15 ஆம் திகதி 2054/09 எனும் அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய உடனடி அபராத விதிப்பு (Spot fine) தொடர்பிலான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பழைய உடனடி அபராத விதிப்பு (Spot fine), 23 விதி மீறல்கள் தொடர்பில், வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், புதிய உடனடி அபராதவிதிப்பானது, 33 போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் உரிய அபராத சீட்டை வழங்குவதற்கு பணிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், 18 வயதுக்குஉட்பட்டோர் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப் பத்திரம் அற்றவரை சேவைக்கு அமர்த்துதல் ஆகிய மூன்று விதி மீறல்கள் புதிய திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளதோடு, அவை நீதிமன்றில் வழக்குத் தொடருதல் அடிப்படையான குற்றத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

அது தவிர, ஏற்கனவே இருந்த 23 விதி மீறல்களில், வாகன இலக்கத் தகடு மற்றும் வாகன இலக்கத்தகட்டின் வடிவம் ஆகிய இரு விதி மீறல்களும், ஒன்றாக்கப்பட்டு வாகன இலக்கத் தகடு எனும் ரூபா 1,000 உடனடி அபராத விதிப்பு விதிக்கப்படும் புதிய விதி மீறலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஏற்கனவே இருந்த 23 விதி மீறல்கள் (3 நீக்கம், 2 விதி மீறல் ஒன்றாக்கப்பட்டுள்ளது) 19 ஆவதோடு, மேலும் 14 விதி மீறல்கள் அவற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட 14 விதி மீறல்களும் அதற்கான உடனடி அபராத விதிப்பு அபராதங்களும் வருமாறு -

(01) அனுமதிப்பத்திரமின்றி அவசரச் சேவை அல்லது பொதுச் சேவை வாகனங்களைச் செலுத்துதல் - ரூ. 1,000

(02) அனுமதிப்பத்திரமின்றி விசேட செயற்பாட்டு வாகனங்களைச் செலுத்துதல் - ரூ. 1,000

(03) அனுமதிப்பத்திரமின்றி இரசாயனப் பொருள்கள் மற்றும் தாக்குதிறன் மிக்க மூலப்பொருள்கள் கொண்ட வாகனங்களைச் செலுத்துதல் - ரூ. 1,000

(04) 500 இற்குள் உள்ளடங்கும் வாகனத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் கொண்டிருக்காமை - ரூ. 1,000

(05) சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டு செல்லாமை - ரூ. 1,000

(06) ஆலோசக அனுமதிப் பத்திரம் இன்மை - ரூ. 2,000

(07) புகை போன்றவற்றை, அதிகமாக வெளிப்படுத்துவது - ரூ. 1,000

(08) ஆசனப் பட்டி அணியாமை - ரூ. 1,000

(09) வாகனத்திலிருந்து அதிக சத்தம் வெளிப்படுத்தல் - ரூ. 1,000

(10) வீதி சமிக்ஞையைப் பின்பற்றாமை - ரூ. 1,000

(11) பஸ்களில் அதிக பயணிகளை ஏற்றிச் செல்லல் - ரூ. 500

(12) லொறிகளில் அல்லது முச்சக்கர, மோட்டார், வான்களில், கொள்ளக்கூடிய அதிகூடிய பாரத்திலும் பார்க்க அதிக பொருள்களை ஏற்றிச் செல்லல் - ரூ. 500

(13) மோட்டார் வாகனம் தொடர்பான உத்தரவை மீறல் - ரூ. 1,000 (கண்ணாடியை மறைத்தல் - Tinted Glass, கையடக்க தொலைபேசி பாவனை உள்ளிட்டவை)

(14) உமிழ்வுச் சான்றிதழ் (புகை பரிசோதனை) உள்ளிட்ட சான்றிதழ்களை உடன் கொண்டு செல்லாமை - ரூ. 500

அத்துடன், ஏற்கனவே உள்ள அபராத விதிப்பிற்கு அமைய, ஆகக் குறைந்த அபராதத் தொகை ரூபா. 20 ஆகவும், அதி கூடிய அபராதத் தொகை ரூபா 5,000 ஆகவும் காணப்பட்டது.

இன்று (நேற்று) முதல் அமுலாகும் உடனடி அபராத விதிப்பு அபராதவிதிப்பில், மிகக்குறைந்த அபராதத் தொகை ரூபா 500 ஆகவும், அதி கூடிய அபராதத் தொகையான ரூபா 3,000 அதிக வேகமாக வாகனத்தைச் செலுத்துவது தொடர்பிலான விதி மீறல் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த அபராதத் தொகையைச் செலுத்த, அபராத சீட்டு வழங்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும் என்பதோடு, அதற்கு மேலதிகமாக வழங்கப்படும் மேலதிக 14 நாள்களுக்குள் அபராதத் தொகை செலுத்தப்படும்போது, குறித்த அபராதத் தொகையை இரட்டிப்பாகச் செலுத்த வேண்டும்.

அத்துடன், இந்த அபராதத் தொகையை, நாடு முழுவதிலுமுள்ள ஏதாவதொரு அஞ்சல் அலுவலகங்களிலோ அல்லது பிரதேச செயலகங்களிலோ செலுத்தலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க)

## மரத்தை அகற்றக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்



பதுளை எலதலுவை பெருந்தோட்ட குடியிருப்பு பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 5 மணியளவில் பாரிய ஆலமரமொன்று சரிந்து விழுந்ததில் குடியிறுப்பின் ஒரு பகுதியும் தோட்ட காளியம்மன் ஆலயமும் முற்றாக சேதமாகியுள்ளன.

இதையடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் தமது குடியிருப்புத் தொகுதியின் மீது சரிந்து விழுந்துள்ள மரத்தை அப்புறப்படுத்த கோரியும் சேதமடைந்த குடியிருப்புத் தொகுதிக்கு பதிலாக புதிய வீடமைப்பு திட்டமொன்றை கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கக் கோரி பதுளை எலதலுவையில் நேற்று பாதையை மறித்து டயர்களை எரித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனீவாவில் இலங்கைக்கு கடும் சிக்கல்

கொழும்பு, ஜூலை 16

தூக்குத் தண்டனை நிறைவேற்ற இலங்கை முன்னெடுத்துள்ள தீர்மானம் குறித்து எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்படவுள்ளது.

தூக்குத் தண்டனையை நீக்குவதாக இலங்கை அரசு கடந்த 2015 செப்ரெம்பர் மாதம் நடந்த ஜெனீவா மாநாட்டில் வாக்குறுதியளித்திருந்தது.

இதனால், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ள மாநாட்டில், இந்த வாக்குறுதியை மீறியமை தொடர்பில் காரணம் முன்வைக்க இலங்கை நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனை நிறைவேற்ற இலங்கை எடுத்துள்ள தீர்மானத்துக்குச் சர்வதேச ரீதியிலுள்ள ஐந்து மனித உரிமைகள் அமைப்புக்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)




மனித உரிமை தொடர்பான சான்றிதழ் கற்கைநெறி
Certificate Course for Human Rights
பிரிவு II ஆரம்பமாகிறது
"மனித உரிமைகள் பற்றிய அறிவு உடையவரே உன்னதமான சமூகப் பணியாளராக முடியும்"

யாழ் மாவட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வலுப்படுத்துவதல் மற்றும் ஆளணியை அதிகரிப்பதற்கான பயிற்சி நெறி.

யார் விண்ணப்பிக்க முடியும்:

1. மனிதவுரிமைச் செயற்பாட்டில் அக்கறையுள்ள அரச உத்தியோஸ்தர்கள்.
2. தொழிலாளர் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் சங்கத்தினர்.
3. சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்.
4. அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள்/ தொண்டர்கள்.
5. சமூக சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள், யுவதிகள்.

இடம் : யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : புரட்டாசி - மார்கழி 2018 வரை. (04 மாதங்கள் - 80 மணித்தியாலங்கள்)
நேரம் : சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை
முழுப்பயிற்சிக் கட்டணம் ரூபா 6000/=

முன்னணி மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்துறை சார்ந்தோர் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களின் பணியாளர்களால் பயிற்சிகள் நடத்தப்படும். ஒரு பிரிவில் முப்பது பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். தங்கள் சுயவிவரங்களை 02.08.2018ம் திகதிக்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம். பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
திரு.தேவநாயகம் தேவானந்த்
கௌரவ தலைவர்
யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல :021 222 3668

காலைக்கதிர் Kalaikkathir



# முல்லைத்தீவில் தங்கச் சுரங்கம்?

## படையெடுக்கும் பலர் பொலிஸ் வலையில்!

## முன்னாள் இராணுவ மேஜரும் கைது

வடக்கு மாகாணம் திடீரென தங்கத்திற்கு அமெரிக்காவினதும் தென்னாபிரிக்காவினதும் தங்கச் சுரங்கங்களை விட பிரபலமடைந்துள்ளது. ஏனென்றால் தங்கத்தைத் தேடி வடக்கிற்கு வந்த இரண்டு வெளிநாட்டவர்கள் பாதுகாப்புப் பிரிவினரிடம் அகப்பட்டுக் கொண்டுள்ளார்கள். கடந்த ஜுன் மாதத்தில் மாத்திரம் வடக்கில் தங்கம் தேடி வந்த இருப்பத்தேழு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிடமிருந்து தங்கத்தைத் தேடுவதற்காக கொண்டுவரப்பட்ட எட்டு ஸ்கானர் இயந்திரங்களும் வடக்கு பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடக்கிற்கு தங்கத்தைத் தேடி வரும் நபர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் ஏன் கைது செய்யப்படுகின்றார்கள் என்பது வடக்கு மக்கள் அறிந்ததே. ஆனால் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு இது பெரும் கேள்வியாகும்.

ஏனைய பிரதேசங்களிலிருந்து தங்கத்தைத் தேடி வடக்கிற்கு வருபவர்கள் அதிகமாக செல்வது முல்லைத்தீவு மாவட்டத்துக்குத்தான். அம்மாவட்டத்திலுள்ள வெள்ளமுள்ளிவாய்க்கால் போன்ற இடங்களுக்கே செல்கின்றார்கள். தங்கத்தைத் தேடி தெற்கிலிருந்து வடக்குக்கு வருபவர்கள் ஏன் முல்லைத்தீவுக்கு செல்கின்றார்கள்? அங்கு தங்கச் சுரங்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழலாம். ஆகவே இது குறித்து அறிய முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்து நான்கு வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் செந்தில்காந்தன் சூரியகுமாரைச் சந்தித்தோம்.



முல்லைத்தீவில் குழிகளிலுள்ள தங்கத்தைத் தோண்டி எடுக்க ஏனைய பிரதேசங்களிலுள்ள மக்கள் இன்று நேற்றல்ல, யுத்தம் இடம்பெற்ற வேளையிலும் இங்கு வந்தார்கள். ஆனால் யுத்த காலத்தில் இவ்வளவு தங்கக் குழிகள் தோண்டப்பட்டதாக நாம் அறியவில்லை. அவ்வாறு தோண்டுவதற்கும் யுத்த காலத்தில் அனுமதி பெற முடிந்த அதிகாரம் பெற்றவர்களாலேயே இயலுமாக இருந்தது. முல்லைத்தீவில் தங்கக் குழிகள் அதிகரித்தன. யுத்தத்தின் இறுதிக் காலங்களில்தான்... அதற்குக் காரணம் தங்கத்தை விட உயிருக்கு மதிப்பு அதிகம் என்பதால்.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் தங்களிடமிருந்த அனைத்து தங்கங்களையும் புதைத்து விட்டு தப்பிச் சென்றார்கள். அந்தஅமைப்பினருக்கும் தங்கம் தானாகக் கிடைக்கவில்லை.



இவர்கள் ஆரம்பத்தில் மக்களிடம் எடுத்துக் கொண்டார்கள். அவ்வாறு பெற்றுக் கொண்ட பெருமளவு தங்கத்தை தம்வசம் வைத்திருந்தார்கள். ஆரம்பத்தில் இரவு நேரம் வீடுகளுக்கு வந்து எடுத்துக் கொண்டார்கள். பின்னர் அவர்கள் தமிழ்த் திருமணங்களின் போது வழங்கப்படும் வரதட்சணையில் நூற்றுக்கு இருபது வீத தங்கவரியை விதித்தார்கள். தமிழர்களின் திருமணத்தின் போது முதலிடம் வகிப்பது தங்கமாகும். தமிழ் கலாசாரப்படி பெண் பிள்ளைகளுக்கு திருமணத்தின் போது வரதட்சணை வழங்குவார்கள். தங்க நகைகளும் வழங்கப்படும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு இந்த திருமணத்தைப் பார்த்து வழங்கப்படும் வரதட்சணைக்கு அமைய தங்கத்துக்கு நூற்றுக்கு இருபது வீத கமிஷன் பெற்றார்கள். இதன் மூலமும் அவர்களுக்கு அதிகளவு தங்கம் கிடைத்தது. யுத்த நிலைமை மோசமாகிய போது வடக்கிலிருந்து ஒருவர் இருவராக வடக்கை விட்டு வேறிடங்களுக்கு செல்லத் தொடங்கினார்கள். அவர்களை உடனே வெளியேற விடுதலைப் புலிகள் விடவில்லை. இயக்கத்துக்கு ஒரு பிள்ளை வழங்குமாறு நிர்ப்பந்தித்தனர். அதனை நிறைவேற்ற முடியாதபோது அதற்குப் பதிலாக தங்கத்தையே கேட்டார்கள்.

வடக்கிற்கு தங்கத்தைத் தேடி வரும் நபர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் ஏன் கைது செய்யப்படுகின்றார்கள் என்பது வடக்கு மக்கள் அறிந்ததே. ஆனால் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு இது பெரும் கேள்வியாகும்.

தமிழ் சமூகத்தில் தங்கத்துக்கு முக்கிய இடமுள்ளது. அதற்கு விடுதலைப் புலிகளும் விதிவிலக்கல்ல. இவ்வாறு தங்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்தார்கள். பின்னர் ஈழம் வங்கியை ஆரம்பித்தார்கள். அதன் மூலம் களவு அடைவு பிடித்தார்கள். அதன் மூலமே அவர்களுக்கு அதிகளவு தங்கம் கிடைத்தது.

இவ்வாறு அடைவு பிடித்த தங்கத்தை விடுதலைப் புலிகள் கிளிநொச்சியை கைவிட்டு செல்லும் போது வெள்ளை நிற பைகளில் இட்டு லொறிமூலம் முல்லைத்தீவுக்கு கொண்டு செல்வதை கண்டோம்.

கிளிநொச்சி ஈழம் வங்கியை இராணுவம் கைப்பற்றியது. ஆனால் அவசரமாக கொண்டு செல்ல முடியாத ஓரளவு தங்கம் இராணுவத்தினரின் வசமாகியது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அடைவுச் சீட்டுக்களை காட்டிய, தங்க நகைகளை வாங்கிய பற்றுச்சீட்டுகளைக் காட்டிய இருநூறு குடும்பங்களுக்கு அவர்களின் தங்கம் மீள கையளிக்கப்பட்டது.

இறுதியில் யுத்தத்தில் தோல்வியடையும் போது அவர்கள் இரவு நேரங் களில் பெரிய பீப்பாய்களில் தங்கத்தை இட்டு பெகோ மூலம் குழிகளை வெட்டி நிலத்தில் புதைத்தார்கள்.

இந்த தங்கத்தை தேடியே முல்லைத்தீவுக்கு படையெடுக்கின்றார்கள். இது சட்டவிரோத செயலாகும். அதனால் விடுதலைப்புலிகள் புதைத்த தங்கம் யாருக்கும் சொந்தமில்லை.

நான் பொலிஸில் கடமை புரிந்த வேளையில் அங்கே தங்கம் புதைக்கப்பட்டுள்ளது, இங்கே தங்கம் புதைக்கப்பட்டுள்ளதெனக் கூறுவார்கள். அவ்வேளையில் நாம் நபர்களிடமிருந்து பெற்ற தகவல்களை நீதிமன்றில் சமர்ப்பித்து அந்த குறிப்பிட்ட இடத்தை தோண்ட அனுமதி பெறுவோம். இதனை பொலிஸாரால் மட்டும் தனியே செய்ய முடியாது. நீதிபதியோ அல்லது நீதிமன்றம் அதிகாரம் வழங்கிய ஒருவரோ அந்த இடத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.

ஏனைய பாதுகாப்புப் பிரிவு உயரதிகாரிகளையும் அழைக்க வேண்டும் வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பவற்றையும் அழைக்க வேண்டும். எனது முன்னிலையில் பதினான்கு குழிகள் தோண்டப்பட்டன. இராணுவத்துக்கு கிடைத்த தகவலின்படி நீதிமன்ற உத்தரவின்படி பொலிஸாரால் தோண்டப்பட்டது. அதிலிருந்து ஒரு மஞ்சாடி தங்கமாவது கிடைக்கவில்லை.

பாதுகாப்புப் பிரிவினருக்கு புதைக்கப்பட்ட தங்கம் தொடர்பாக அன்று புலிகள் அமைப்பில் இருந்தவர்களே உளவு சொல்கின்றார்கள். அவர்கள் புனர்வாழ்வு பெற்றவர்கள். அவர்களிடம் பெற்ற தகவல்களின்படி சரியான தகவல்களைப் பெற்று தங்கத்தை அடைந்தவர்களும் இருக்கின்றார்கள். அதே வேளை தங்கத்தை தோண்டச் சென்று முல்லைத்தீவு நகருக்குள் நுழைவதற்கு முன்னரே கைது செய்யப்பட்டவர்களும் இருக்கின்றார்கள்.

### ஸ்கானரின் பெறுமதி ரூபா 50 லட்சம்

கடந்த ஜுன் மாதம் ஸ்கான் இயந்திரம் ஒன்றுடன் முல்லைத்தீவை நோக்கி பயணம் செய்தவர்கள் பொலிஸாரால் வவுனியாவில் கைது செய்யப்பட்டார்கள். அதில் ஒருவர் இராணுவப் படையில் சில காலம் முல்லைத்தீவு பிரதேசத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மேஜராவார். அவர்களால் விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்ட இடத்தை கண்டுபிடிக்க கொண்டு செல்லப்பட்ட ஸ்கானரின் பெறுமதி ரூபா ஐம்பது இலட்சமாகும்.

இறுதியில் அவர்களுக்கு தங்கம் கிடைக்கவுமில்லை. ஸ்கானர் இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டது. அது மாத்திரமல்ல சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். இலங்கை விமானப் படை அங்கத்தவர்கள் மூன்று பேர் முல்லைத் தீவில் தங்க வேட்டை நடத்திய போது இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டார்கள்.

புலிகள் அமைப்பின் அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி நீதிமன்ற உத்தரவின்படி தங்கத்தை தேடி நடத்தப்பட்ட அகழ்வுகள் மூலம் அரசாங்கத்துக்கு ஒரு கிராம் தங்கம் கூட கிடைக்கவில்லை. தங்கம் அனைத்தும் யாருக்கும் தெரியாமல் காணாமற்போயுள்ளதாக தெரிகின்றது. ஆனால் இன்னும் தங்கம் எஞ்சியிருக்கும் என்ற நம்பிக்கையில் அதனைத் தேடிக் கொண்டு திருட்டுத்தனமாக முல்லைத்தீவுக்கு செல்பவர்களின் எண்ணிக்கையிலும் குறைவிருக்காது.

- ரசுல தில்ஹார கமகே


காலைக்கதிர்
Kalaikkathir



# நடிகர் ராமநாயக்க எமக்கு உதவுபவராக தெரியவில்லை!

## ‘விஜய குமாரணதுங்க போன்றவர் என நினைத்தேன்; எனது எண்ணம் தவறு என இப்போது உணருகிறேன்’

**வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வாரத்துக்கொரு கேள்விக்கான பதில் வரிசையில் - இம்முறை வழமைக்கு மாறாக முக்கியமான நான்கு கேள்விகளுக்கும் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. பற்றிய மற்றொரு கேள்விக்கும் பதில் அளித்துள்ளார்.**



**இவ்வாரம் கேள்விகள் அதிகரித்துள்ளன. அவற்றுள் என்னைப் பற்றி எழுபப்பட்ட சில கேள்விகளுக்குப் பதில் இறுக்கலாம் என்று எண்ணியுள்ளேன்.**

முதற் கேள்வி பின்வருமாறு.

**1.வடக்கு மாகாணப் போக்குவரத்து நியதிச்சட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புக்கள் பெறக்கூடிய 63 பேரின் வேலை வாய்ப்பை முதலமைச்சர் முடக்கி வைத்துள்ளார் என்பது.**

**பதில்** - வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச்சட்டத்திற்கு அமைய 63 பேருக்கு ஆளணி அங்கீகரிக்கப்பட்டது.

அனுபவம் வாய்ந்தவர்கள் உள்வாங் கப்படல் வேண்டும் என்ற நோக்கில் வடமா காண தனியார் போக்குவரத்துநிறுவனங்களில் கடமையாற்றிய 38 பேருக்கு பா.டெனீஸ்வரன் அவர்களால் தற்காலிகமாக நியமனம் வழங்கப்பட்டது.

நான் அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் அவர்களை உள்வாங்கி நிரந்தரம் ஆக்குவதற்கும் மிகுதியினரை (25 பேரை) உரிய முறைப்படி தெரிவு செய்வதற்கும் ஆட்சேர்ப்புத் திட்டம் எமது அமைச்சினால் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பிய போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. அதாவது தற்காலிக நியமனம் பெற்றவர்களை உள்ளேற்க அவர்கள் அனுமதி தரவில்லை.

இந் நிலையில் 38 பேருக்கான ஆளணியை ஒதுக்கிவைத்துவிட்டு மிகுதி பேருக்கு விளம்பரம் கோரி வேலை வழங்கக்கூடியதாக இல்லை. ஏனெனில் பதிவுகளின் பிரகாரம் மொத்தமாக 63 பதவிகளும் வெற்றிடமாகவே தற்பொழுதும் உள்ளன. ஆனால் 38 பேர் தற்காலிகமாகப் பணியாற்றுகின்றார்கள். எனினும் குறித்த 38 பேரையும் நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை முற்றுப் பெற்றதும் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி மிகுதி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். எதனையும் முடக்கி வைக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. டெனீஸ்வரனால் நியமிக்கப் பட்டவர்களுக்கு நிரந்தர நிய மனம் வாங்கிக் கொடுக்கவே இந்தத் தாமதம். அவர்களைக் கைவிட்டு விட்டு 63 பதவிகளுக்கும் புதிதாக விளம்பரம் கோரினால் அவற்றை உடனேயே நிரப்ப முடியும்.

**2.முதலமைச்சரின் அமைச்சின் சுற்றுலா அபிவிருத்தித் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் மத்திய மாகாணத்திற்கு வடக்கு மாகாணசபையின் நிதிகளைச் செலவழித்து அண்மையில் சுற்றுலா மேற்கொண்டமை பணவிரயம் செய்வதான செயல் என்பது.**

**பதில்** - சுற்றுலாத்துறை அபிவிருத்தி துறையின் கீழ் எமது அமைச்சிற்கு ஒதுக் கபட்ட PSDG நிதியின் கீழ் அறுபது மில்லியனுக்கான வேலைத் திட்டத்தில் இலங்கையின் பிற மாகாணங்களுடனான அனுபவ பகிர்வுக்கான கள விஜயமும் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றது. இதற்காக ரூபா ஒரு மில்லியன் நிதி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட் டுள்ளது. அத்துடன் பிரதம செயலாளரின் தலைமையிலான மாகாணத் திட்டமிடல் குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர்களின் துறை சார்ந்த ஆளுமை விருத்தியையும் அனுபவப் பகிர்வையும் அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுப் பிரயாணங்களும் உள்ளூர்ப் பயணங்களும் அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது வழமையான நடைமுறையாகும். இதற்கிணங்கவே எனது அமைச்சின் உத்தியோகத் தர்க்ளும் வடமாகாண சுற்றுலாத்துறை தொடர்பான அனுபவ பகிர்வு களவிஜயம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

வடமாகாண சுற்றுலாப் பணியகமானது 07.06.2018 அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் முகாமைத்துவ சபையானது என்னால் நியமிக்கப்பட்டு இவர்களின் முதலாவது முகாமைத்துவ சபைக்கூட்டமானது 14.06.2018 நடைபெற்றது. இக் கூட்டத்தில் சுற்றுலாத் துறையில் விருத்தி அடைந்துள்ள மற்றும் அத்துறையில் முன்னணியில் உள்ள ஏனைய மாகாணங்களில் சுற்றுலாப் பணியகம் அல்லது சுற்றுலா அதிகார சபை என்பன எவ்வாறான கட்டமைப்புக்களைக் கொண்டு செயலாற்றுகின்றன என்பது தொடர்பிலும் அவர்களால் மேற்கொள்ளப்படும் சுற்றுலா தொடர்பான அபிவிருத்தி வேலைகள் தொடர்பாகவும் அனுபவ பகிர்வு மூலம் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக கள விஜயங்கள் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்திற்கமைய இம் மாதம் 6,7 மற்றும் 8 ஆம் திகதிகளில் மத்திய மாகாணத்திற்குக் களவிஜயம் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி களவிஜயத்திற்கான மதிப்பீடானது தயாரிக்கப்பட்டு அது அனுமதிக்கப்பட்டு அம் மதிப்பீட்டின் பிரகாரமே களவிஜயமானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியே களவிஜயத்திற்கான செலவுகளுக்குப் பாவிக்கப்பட்டது. மேற்படி நிதி செலவழிக்கப்படாதிருந்தால் பணம் திருப்பி அனுப்பப்படும்.

**3.முதலமைச்சர் உதவியாளர் ஒருவருடன் 2014 தொடக்கம் 2018 வரையிலான காலகட்டத்தில் விமானம் மூலம் கொழும்பு சென்று வந்தமையால் இருபது இலட்சம் வரையிலான பொதுமக்களின் பணம் செலவு செய்யப்பட்டுள்ளது.**

**பதில்** - உத்தியோகபூர்வ கடமையின் நிமித்தம் வடக்கு மாகாண முதலமைச்சர் அவர்களும் பாதுகாப்பு பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவரும் விமானம் மூலம் 2014ல் இருந்து இன்றுவரை கொழும்பு சென்று வந்தமைக்கான விமானக் கட்டணக் கொடுப்பனவு முதலமைச்சருக்கு ரூ.1,115,500/= ம் பொலிஸ் உத்தியோகத்தருக்கு ரூ. 694000/= ம் ஆவன.

இந்த விவரங்களை RTI சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட போது நானே வெளியிடு மாறு பணித்தேன். முதலமைச்சர் விமா னத்தில் போக வேண்டிய காரணம் துரி தமும், பாதுகாப்பும், உடல் வசதியும் ஆவன. மற்றைய மாகாண முதலமைச்சர்கள் அவ்வாறு பயணம் செய்வதில்லை என்று கூறப்பட்டது. இலங்கையில் கொழும்பில் இருந்து ஆகக் கூடிய தூரத்தில் மாகாணசபை அமைந்திருக்கும் இடம் யாழ்ப்பாணமே. பொதுவாக வாக னங்கள் கொழும்புக்குப் பயணம் செய் வதானால் ஏழு மணித்தியாலங்கள் தேவை. ஏழு மணித்தியாலங்கள் பயணம் செய்துவிட்டு அதே நாளோ மறுநாளோ உத்தியோகபூர்வ கூட்டங்களில் கலந்து கொள்வது வடமாகாண முதலமைச்சருக்கு மட்டும் ஏற்படக் கூடிய இக்கட்டாகும். மேலும் அவ்வாறான பயணத்தில் ஈடுபடும் ஒரே தமிழர் வடக்கு மாகாண முதலமைச்சர் மட்டுமே. அவரே நான்கு மணித்தியாலங்களுக்கு சிங்களப் பிரதேசங்களில் பயணிக்க வேண்டியவர். இலங்கையில் 75 வயதிற்கு மேற் பட்ட முதலமைச்சர் வடமாகாண முதலமைச்சர் மட்டுமே. பொலிஸார் பாதுகாப்பு நிமித்தம் எனக்களித்த அறிவுரையின் பிரதிபலிப்பே விமானமூலப் பயணம். இதற்கான அப்போதைய ஆளுநரின் அனுமதி கிடைத்தது. அப்போதைய ஆளுநர் 15 தொடக்கம் 20 வரையிலான விசேட அதிரடிப்படையினரைத் தமது பாதுகாப்புக்கு ஈடுபடுத்தினார். வாகன எரிபொருள், அதிரடிப்படையினர் செலவுகள் என்று அவர்களின் செலவு பற்றி எவருமே மூச்சு விடவில்லை. தற்போது இளந் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அவ்வாறான பாதுகாப்பைக் கேட்டுப் பெற்றுள்ளனர்.

இது இவ்வளவுக்கும் என்னுடன் இரண்டு அல்லது மூன்று பொலிஸாரே உள்ளூரில் பாதுகாப்புக்கு வருகின்றார்கள். ஒருவரையே விமானப் பயணத்தின் போது கூட்டிச் செல்கின்றேன். விமானப்படையினரின் விமானப் பயணங் களின் போது பொலிஸாருக்குக் கட்டணம் அறவிடப்படுவதில்லை.

மேலும் தமது பாதுகாப்புப் பற்றிய இவ்வாறான விவரங்களை எவரும் வெளி யிடுவதில்லை. காரணம், முதலமைச்சரை வேண்டாதவர்கள் இத்தரவுகளை தமக்கு அனுசரணையாகப் பாவிக்கலாம். ஆனால் மக்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் முதலமைச்சருக்கு எதிராகத் திட்டமிட்டுப் பரப்பப்படும் சந்தேகத்தை ஏற்படுத்தும் கேள்விகளுக்குப் பதில் இறுக்கவும் உண்மையானது வெளிப்படுத்தப்படுகின்றது.

**4. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னமும் நடைமுறைப் படுத்தப் படவில்லை என்று கூறப்படுகின்றதே?**

**பதில்** - சில தீர்மானங்கள் நடைமுறைப்படுத்த முடியாதவை. முன்னைய பிரதம நீதியரசர் ஒருவருடன் அவரின் தலைமையின் கீழ் நான் அமர்வில் இருந்தபோது அவர் தீர்மானம் ஒன்றை அமர்வில் இருந்து கொண்டே விடுக்க (Bench Order) எத்தனித்தார். உடனே நான் இவ்வாறு தீர்மானம் அளித்தீர்களா னால் நடைமுறைப்படுத்த முடியாது போய்விடும் என்றேன். அதன் பின் அத் தீர்மானம் திருத்தி வழங்கப்பட்டது. ஆகவே சில தீர்மானங்கள் நடைமுறைப்படுத்த முடியாதவை. அதனால்தான் உச்ச நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளோம். உச்ச நீதிமன்றத்தின் முன் வழக்கு இருக்கும் போது எந்தளவுக்கு அதன் உள்ளடக்கப்பொருள் பற்றி விமர்சிக்கலாம் என்பது Sub Judice என்ற மன்றாய்வில் கோட்பாட்டின்-பால்ப் பட்டது. இது சம்பந்தமாக ஏற்கனவே நான் மாகாணசபையின் கடைசி அமர்வின் போது எனது கருத்தை வெளியிட்டுள்ளேன். அதைத்திரும்பவும் இங்கு ஒப்புவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நம்புகின்றேன்.

**ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. வரலாம்... ஆனால்...!**

**கேள்வி** - வடக்கை வந்து பார்த்து மக்களின் கருத்துக்களை அறிந்து செல்லுமாறு நீங்கள் விடுத்த கோரிக்கைக்கு நடிக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் இராமநாயக்க ஒத்துக்கொண்டுள்ளாரே. இது பற்றி?

**பதில்** - ஆம். அவர் தனி சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பியுள்ளார். அவற்றை மொழிபெயர்க்கக் கொடுத்துள்ளேன். தொடக்கமே பிழை போலத் தெரிகிறது.

மேலும் நான் அவருக்கு வடக்குக்கு வந்து செல்லுமாறு கூறியதன் பின்னரே அவர் விஜயகலா சம்பந்தமாக அவரிடம் சம்மதம் பெறாமல் அவருடனான கருத்துப் பரிமாற்றங்களை வலைப் பின்னல்களுக்கு வெளியிட்டுள்ளார். இது ஒரு குற்றமாகக் கணிக்கக் கூடிய விடயம். குறித்த நபரை வடக்கிற்கு வருமாறு அழைத்ததன் பின்னர் நடைபெற்ற அவர் சார்பான நிகழ்வுகளும் அவர் பற்றி என் கொழும்பு நண்பர்கள் கூறிவருவதும் அவ்வளவு ஏற்புடையதாகத் தெரியவில்லை. இவர் வடக்கு வந்து உண்மையை அறிந்து தெற்கிற்கு தெரியப்படுத்தக் கூடிய ஒருவராகத் தெரியவில்லை. நான் அவரை காலஞ்சென்ற விஜய குமாரணதுங்க போன்ற ஒருவர் என்றே முதலில் எண்ணினேன். என் எண்ணம் தவறென இப்போது தெரிகின்றது.



# கல்விக் கதிர் வெளியீடு 06


## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

### பகுதி - I

**1 - 40 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக**


**தொடக்கத்தில் உள்ள உருவிற்குப் பொருத்தமான உருவை தெரிவு செய்க**

01.



1 2 3

02.



1 2 3

**படத்தில் காட்டப்படும் செயற்பாட்டைச் சரியாகக் குறிப்பிடும் விடையின் கீழ்க் கோடிடுக.**

03.



1. பூசுதல்
2. அடித்தல்
3. வரைதல்

04.



1. நனைதல்
2. மிதத்தல்
3. நீந்துதல்

**தரப்பட்டஐந்துசொற்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரிய சொற்களைத் தெரிவுசெய்க.**

05. பருப்பு, கடலை, அன்னாசி, பயறு, மாம்பழம்
1. அன்னாசியும், மாம்பழமும்
2. கடலையும், அன்னாசியும்
3. பயறும், பருப்பும்

06. தொலைக்காட்சி, அலுமாரி, வானொலி, பத்திரிகை, மேசை
1. தொலைக்காட்சியும், மேசையும்
2. அலுமாரியும், மேசையும்
3. பத்திரிகையும், அலுமாரியும்

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

07. தை, பங்குனி, வைகாசி ........................... ஐப்பசி
1. ஆவணி 2.ஆடி 3. சித்திரை

08. | 2 | 5 | | 3 | 6 | | 4 | 7 | ............

1. | 5 | 6 | 2. | 5 | 8 | 3. | 6 | 9 |

**தரப்பட்ட கவிதையைக் கொண்டு வினாக்களுக்கு உரிய விடையை தெரிவு செய்க**

**மென்மையும் வெண்மையும் கொண்ட**
**மணந்தரும் மல்லிகை மலர்களாம்**
**துள்ளிடும் பிள்ளைகள் உள்ளம்**
**கள்ளமே இல்லாத இல்லம்**

09. . இக்கவிதை கூறுவது
1. மல்லிகை மலர்கள் பற்றி
2. மல்லிகை மலர்களின் இயல்பு பற்றி
3. சிறு பிள்ளைகளின் உள்ளம் பற்றி

10. கள்ளமே இல்லாத என்பதன் கருத்து
1. வஞ்சகம் அற்ற
2. சூதுவாது மிக்க
3. உற்சாகம் நிறைந்த

11. பாக்கு ⟶ குருவி, விறகு. ⟶ ? . ................
1. குறத்தி 2. குமரி 3.குழந்தை

12. தென்னை – ஈர்க்கில் எனின், மூங்கில் ...................................
1. பிரம்பு 2. பலகை 3. கூரை

13. கதி, காவி, கிவி
சதி, சாவி, சிதை
பதி,............ ,..............
(1) பாவி, பீடை (2) பாவி, பிரி (3) பாதி,பிரிவு

14. தரவு, பரவு, பதவி
கதிரை, முதிரை, முகம்
சந்தை, மந்தை,
(1) சமாதி (2) மசாவி (3) மசகு

**வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

15. கால், கை, விரல், உடல், மூக்கு
16. விமானம், பரசூட், உலங்குவானூர்தி, ஈருருளி, செய்மதி

தடித்த எழுத்துக்களுடைய சொல்லிற்கு மிகப்பொருத்தமுடைய சொல்லைத் தொவு செய்க.

17. யாழ்ப்பாணம் **வடகிழக்கு** பருவ பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறுகின்றது.
(1) வாயு மூலைத்திசை
(2) நிருத்தி மூலைத்திசை
(3) ஈசானமூலைத் திசை

18. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மதிப்பிற்கு உரியவர்கள்
(1) **ஊதாரிகள்**
(2) அங்கத்தவர்கள்
(3) உயிரானவர்கள்

19. 3, 8, 14, 21 ....,.............
(1) 29, 40 (2) 29 ,39 (3) 29, 38

20. 128, 64, 32, 16,....., ........
(1) 4, 2 (2) 6, 2 (3) 8, 4

### புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் 05 இன் பகுதி, I, பகுதி II விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 11. 3 | 21. 1 | 31. 2 |
| 02. 1 | 12. 1 | 22. 2 | 32. 1 |
| 03. 1 | 13. 3 | 23. 3 | 33. 3 |
| 04. 1 | 14. 1 | 24. 3 | 34. 2 |
| 05. 3 | 15. 3 | 25. 2 | 35. 1 |
| 06. 1 | 16. 1 | 26. 2 | 36. 2 |
| 07. 3 | 17. 2 | 27. 3 | 37. 3 |
| 08. 2 | 18. 3 | 28. 3 | 38 2 |
| 09. 1 | 19. 2 | 29. 1 | 39 1 |
| 10. 2 | 20. 3 | 30. 2 | 40 1 |

i) நன்மைசெய்பவர்
ii) மாந்தர்
iii) உடன்பிறந்தவர்
iv) இடர்
v) உடன்பிறந்தவர்
vi) உறவு (6புள்ளி)
i) முகத்தில் தெரியும்
ii) சிலையில் எழுத்து
(2புள்ளி)
i) ஔடதம் ii) வெந்நீர்
iii) தொழிலாளி (3புள்ளி)
i) இலங்கை மின்சார சபை
ii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் (4புள்ளி)
i) ஒலி
ii) வலி (2புள்ளி)
i) × ii) ✓
iii) × iv) ✓ (4புள்ளி)
i) கைதி ii) அடிமை
(2புள்ளி)
i) பேத்தை
ii) குறுகுறுக்கும் (4புள்ளி)
i) நாங்கள் போட்டியை(விளையாட்டை) ஆரம்பிப் போமா?
ii) வெளியே போக வேண்டாம்.(2புள்ளி)
i) Goat
ii) Lorry (2புள்ளி)
i) உறுதி ii) குற்றம் (2புள்ளி)
i) ஆசிரியர் வருவாரா?
ii) விளையாடப் போவோமா? (4புள்ளி)

13. உடபனின்ன (2புள்ளி)
14. பொருத்தமான வாக்கியங்கள்
சொற்களுக்கு இடையே இடைவெளி
முற்றுப்புள்ளி (6புள்ளி)
15 1) 10322 2) 4 m 30 cm
3) 8 , 12 4) 300
5) தென்மேற்கு 6) 250.ரூபாய்00சதம்
7) 40 8) 4 m 40 cm
9) 60203 10) 900
11) 99999 12) XXIV
13) 342.00 14) 9l 000ml
15) 30.00ரூபாய்
(30 புள்ளி)

16. 1) 1 2) 1 3) 3
4) 4 5) 1 6) 3
7) 1 8) 4 9) 1
10) 4 11) 2 12) 4
13) 2 14) 4 15) 1
16) 1 17) 2 18) 4
19) 2 20) 2 21) 2
22) 4 23) 4 24) 2
25) 2
(25புள்ளி)

# பெரிய மீன்பிடி படகு உரிமையாளர்கள் சங்கம் வேலைநிறுத்தத்துக்கு முஸ்தீபு!

கொழும்பு, ஜுலை 16

எரிபொருள் விலை அதிகரிப்பால் நாட்டிலுள்ள மீனவர்கள் பாரிய நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர் என்றும், இதற்கு நியாயமான தீர்வொன்றை வழங்க அரசு தவறும் பட்சத்தில் நாடு முழுவதும் தொடர் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கப் போகிறோம் என்றும் அகில இலங்கை பெரிய மீன்பிடி படகுகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சுஜித் சமந்த தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் பெரிய மீன் பிடி படகுகள் 4650 உள்ளன எனவும் அரசின் திடீர் எரிபொருள் விலை அதிகரிப்பினால் இந்தப் படகுகளின் உரிமையாளர்கள் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பிரதமரின் தலைமையில் ஏற்றுமதி குறித்து ஆராய்வு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எதிர்வரும் வியாழக்கிழமை தேசிய ஏற்றுமதி வினைமுறைத் திறனை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.

இந்த சந்திப்பை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, சர்வதேச வர்த்தக அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜெனீவாவிலுள்ள சர்வதேச மத்திய நிலையம் என்பன இணைந்துஏற்பாடுசெய்துள்ளன.

இந்த சந்தப்பின் போது எதிர்வரும் ஐந்து வருட காலப் பகுதிக்குள் இலங்கையின் ஏற்றுமதி நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

# மைலந்தனையில் யானைத் தொல்லைகள் உயிர் அச்சுறுத்தலுடன் வாழும் மக்கள்

மட்டக்களப்பு, ஜுலை 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மைலந்தனை கிராமத்தின் மக்கள் யானை களின் தொல்லைகளால் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

புணாணை காட்டுப்பகுதியில் இருந்து வரும் யானைகள் பொழும்பு பிரதான வீதியை கடந்து மக்கள் குடியிருப்பு பகுதி மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை இடங்களுக்கு இரவு நேரங்களில் வருகின்றன என மைலந்தனை கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில் –



இக்கிராமத்தில் வாழும் மக்கள் தங்களுடைய ஜீவனோபாய தொழிலாக சேனைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் யானைகளின் வருகையால் சேனைப் பயிர் செய்வதில் பாரிய இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் நள்ளிரவு வருகை தந்த யானைகள் வீடு ஒன்றை உடைத்து சேதப்படுத்தியுள்ளன. குடியிருப்பு பகுதியில் காணப்பட்ட தென்னை மரங்களை அழித்து சேதப்படுத்தியுள்ளதுடன், சேனைப் பயிர் செய்கையில் காணப்பட்ட மரவள்ளியை சேதப்படுத்தியுள்ளன.

இதனால், அச்சத்தின் மத்தியில் எமது வாழ் நாளை கழித்து வருகிறோம். – என தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# போதைப்பொருள் குற்றவாளிகளின் விபரம் நீதியமைச்சிடம் கையளிப்பு!

கொழும்பு, ஜுலை 16

போதைப்பொருள் கடத்தலில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 18 பேரின் விவரங்களை சிறைச்சாலை திணைக்களம் நீதியமைச்சுக்குக் கையளித்துள்ளது.

நாட்டில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த முக்கிய குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என அரசு அண்மையில் முடிவு செய்திருந்தது.

இந்த நிலையில் இந்த குற்றவாளிகளின் விவரங்களை தற்போது நீதியமைச்சுக்கு சிறைச்சாலை திணைக்களம் வழங்கியுள்ளது.

# பாடகி ராணி காலமானார்




இலங்கை தேசிய கீதம் உள்ளிட்ட பல சிங்கள மொழி பாடல்களையும் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட ஏராளமான பாடல்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை பாடல்களையும் பாடிய பழம்பெரும் பின்னணி பாடகி ராணி தனது 75 வயதில் காலமானார்.

இவர் 1951 ஆம் ஆண்டு தெலுங்கில் வெளியான ரூபவாஹினி திரைப் படத்தில் தனது எட்டாவது வயதில் பாட தொங்கிய இவர், தமிழில் தேவதாஸ், கல்யாணி, கல்யாணம் பண்ணிபார், மோகன சுந்தரம், தர்ம தேவதை, சிங்காரி, எம்.ஜி.ஆர். நடித்த ஜெனோவா, திரும்பி பார், சிவாஜி கணேசனும் எம்.ஜியாரும் இணைந்து நடித்த ஒரே படமான கூண்டுக்கிளி, நல்ல காலம், பணம் படுத்தும் பாடு, குணசுந்தரி, கதாநாயகி, காவேரி, முதல் தேதி, அமர கீதம், மர்ம வீரன், காலம் மாறி போச்சு, பாசவலை, படித்த பெண், அலாவுதீனும் அற்புத விளக்கும், எங்கள் வீட்டு மகாலட்சுமி, பர்ணை பிடித்தவள் பாக்கியசாலி, லவகுசா உள்ளிட்ட பல படங்களில் கதாநாயகியர்களுக்காக குரல் கொடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாங்குளம்

# பொதுச் சந்தை கட்டடங்களை பெற்றவர்கள் வேறு நபர்களுக்கு வழங்க முயற்சி



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்குளம் பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதியை பெற்றுக்கொண்ட பல நபர்கள் கடைகளை திறக்காது அந்த கடைகளை வேறு நபர்களுக்கு கூடிய வாடகைக்கு வழங்க முயற்சிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், இந்தக் கடைகளை உரியவர்கள் திறக்காவிட்டால் பிரதேச சபை அதனை மீள பெற்று உரிய வாடகைக்கு வேறு நபர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை 4 ஆவது அமர்வில் இவ்வாறு பிரதேச சபை கடைகளை வாடகைக்கு பெற்று வேறு நபர்களுக்கு வாடகைக்கு கொடுப்பதை தடுக்கும் முகமாக கடை பெற்ற நபர் கடை நடத்தாவிட்டால் அந்த கடையை பிரதேச சபை மீள பெற்று அதை வேறு நபர்களுக்கு வழங்கும் என தீர்மானம் ஒன்றும் எடுக்கப்பட்டது.

எது எவ்வாறு இருப்பினும் பிரதேச சபை கடைகளுக்கு இடைத் தரகர்களாக செயற்படும் இவ்வாறானவர்களை நீக்கி கடை நடத்தும் ஆர்வமுள்ள தேவையுள்ளவர்களுக்கு கடைகளை வழங்கவேண்டியது பிரதேச சபையின் பொறுப்பாகும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (கு- 81)

# அடித்துக் கொல்லப்பட்ட சிறுத்தைப் புலி வளர்க்கப்பட்டதற்கான அடையாளம்

கிளிநொச்சியில் அடித்து கொலை செய்யப்பட்ட சிறுத்தை புலி, வளர்க்கப்பட்டது என்பதற்கான அடையாளம் இருக்கிறது என தகவல் வெளியாகியுள்ளது.

ஆங்கில வாரப் பத்திரிகையொன்றில் இந்த சம்பவம் தொடர்பில் கட்டுரையொன்று வெளியாகியுள்ளது என சுட்டிக்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கிளிநொச்சி, அம்பாள்குளத்தில் கொலை செய்யப்பட்ட சிறுத்தை புலி, கூடொன்றில் வளர்க்கப்பட்டதற்கான அடையாளம் தென்படுகிறது.

சிறுத்தையின் உடற்கூற்று பரிசோதனையில் இதற்கான அடையாளம் காணப்படுவதுடன், இரு தினங்கள் அது உணவு எதனையும் உட்கொள்ளவில்லை என்பதற்கான தடயங்களும் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாள்குளம் பிரதேசத்தில் கடந்த 21 ஆம் திகதி சிறுத்தை புலி ஒன்று அடித்துக் கொல்லப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான காணொலி வைரலாகியிருந்ததுடன், அதனடிப்படையில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.






கொழும்பில் 1989 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட கூட்ட ணித் தலைவர்கள் அமரர்கள் அ.அமிர்தலிங்கம் மற்றும் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் 29 ஆவது வருட நினைவு அஞ்சலி தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண தலைமையகத்தில் கடந்த வெள்ளிக் கிழமை மாலை நடை பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

# இனியவாழ்வு இளைஞர் கழகத்தின் வேலைத்திட்ட ஆரம்ப விழா!

இனியவாழ்வு இளைஞர் கழகத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான youth with-talent வேலைத்திட்டத்தின் ஆரம்பா விழா கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லைத் தூண் போடும் நிகழ்வை விருந்தினராகக் கலந்து கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் .ச.திருச்செல்வம் ஆரம்பித்து வைத்தார்.

அத்தோடு, இந்த நிகழ்வின் விருந்தினர்களாக ச.திருச்செல்வம், அ.விஜிதரன் (இளைஞர் சேவை அதிகாரி, புதுக் குடியிருப்பு) து.நிறோஜன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரும் மற்றும் கிராம மக்கள், இளைஞர்கள் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





# பாகிஸ்தானில் தலிபான் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 130 ஆனது

## தேசிய துக்க தினம் அனுஷ்டிப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 16

பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரத்தில் தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 130 ஆக உயர்ந்துள்ளது..

இந்த நிலையில், பாகிஸ்தானில் நேற்று தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானில் நாடாளுமன்றம் மற்றும் சில மாகாண சட்டசபைகளுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் அங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

தேர்தல் பிரசாரத்தின் போது சில அரசியல் கட்சி தலைவர்களது உயிருக்கு ஆபத்து உள்ளதாக பட்டியல் வெளியிட்டு, தேசிய பயங்கரவாத தடுப்பு ஆணையம் எச்சரிக்கை விடுத்தது.

இதற்கிடையே, மஸ்தாங் மாவட்டத்தில் பலுசிஸ்தான் அவாமி கட்சியின் பேரணியை குறிவைத்து கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைப்படை தாக்குதல் நடந்தது. இதில் அவாமி கட்சி வேட்பாளர் மிர் சிராஜ் ராய்சானி உட்பட 33 பேர் பலியாகினர் என்று முதலில் தகவல் வெளியானது. தொடர்ந்து மீட்பு பணிகளில் ஈடுபட்ட போது பலியானோர் எண்ணிக்கை 130 ஆக உயர்ந்துள்ளது.


மேலும், பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நேற்று தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது என அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(கு)

# அமெ. பெண்களுக்கு முகப் பவுடர் பயன்படுத்தியதால் புற்றுநோய்!

## பல்லாயிரம் கோடி ரூபாய் அபராதம்



அமெரிக்காவில் பிரபல நிறுவனத்தின் முகப்பவுடர் பயன்படுத்தியதால் புற்றுநோய் ஏற்பட்டது என்று குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில், பாதிக்கப்பட்டவர்க்கு அந்த நிறுவனம் பல்லாயிரம் கோடி ரூபா அபராதம் வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண்கள் அழகுக்கு அழகு சேர்க்க முகப்பவுடர் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலையில், பிரபல அமெரிக்க நிறுவனம் ஒன்று, தயாரித்து வழங்கும் முகப்பவுடரில் சேர்க்கப்படும் 'ஆஸ்பெஸ்டாஸ்'என்னும்பொருள், சினைப்பை புற்றுநோயை ஏற்படுத்துவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இது தொடர்பாக மிசவுரி மாகாணத்தின் செயிண்ட் லூயிஸ் நகரை சேர்ந்த 22 பெண்களும், அவர்களது குடும்பத்தினரும் அந்த நிறுவனத்தின் மீது வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கை அங்குள்ள சிவில் நீதிமன்றம் விசாரித்தது.

விசாரணையின்போது, தனிப்பட்ட சுகாதாரத்துக்காக தாங்கள் பயன்படுத்திய முகப்பவுடர்தான் தங்களுக்கு சினைப்பை புற்றுநோயை வர வைத்து விட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது.


ஆனால் அந்த முகப்பவுடர் நிறுவனம், குற்றச்சாட்டை மறுத்தது. எங்கள் முகப்பவுடரில் ஆஸ்பெஸ்டாசும் இல்லை, எங்கள் முகப்பவுடர் புற்றுநோய் தாக்க காரணமாகவும் அமையவில்லை என்று கூறியது.

இந்தவழக்கின்விசாரணைதொடர்ந்து 6 வாரங்கள் நடைபெற்றன. அதன் முடிவில் அந்த முகப்பவுடர் நிறுவனம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக 3,740 கோடி இந்திய ரூபாவும் அபராதமாக சுமார் 27 ஆயிரத்து 880 கோடி இந்திய ரூபா செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பு குறித்து சம்பந்தப்பட்ட முகப்பவுடர் நிறுவனம் சார்பில் கருத்து தெரிவிக்கையில் -

இந்த தீர்ப்பு, எங்களை மிகவும் ஏமாற்றத்துக்கு ஆளாக்கி உள்ளது. இந்த வழக்கு விசாரணை நடைமுறை, அடிப்படையில் நியாயமற்றது. இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வோம் என்று கூறியது.

# இன்று ட்ரம்ப் – புடின் சந்திப்பு வெள்ளை மாளிகை அறிவிப்பு



வொஷிங்டன், ஜூலை 16

கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் உளவு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் தலையிட்டன என்று புகார் எழுந்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும், பின்லாந்து தலைநகர் ஹெல்சின்கியில் இன்று சந்தித்து பேச உள்ளனர்.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் பிரதமர் தெரசா மே மற்றும் ட்ரம்ப் இருவரும் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினர். அப்போது ட்ரம்ப் கூறும்போது,

"ஜனாதிபதி புடினைச் சந்திக்கும் போது, அமெரிக்க தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்து கண்டிப்பாக கேட்பேன்" என்று தெரிவித்தார்.

இதனால் இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பு நடைபெறுமா என்பது கேள்விக்குறியானது. இது குறித்து அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சாரா சேண்டர்ஸ் நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது -

"திட்டமிட்டபடி ஜனாதிபதிகள் ட்ரம்ப்பும் புடினும் திங்கட்கிழமை சந்தித்து பேச்சு நடத்துவார்கள்" என்றார்.

இருநாட்டு ஜனாதிபதிகள் (ட்ரம்ப் – புடின்) சந்திப்பை ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறோம் என்று ரஷ்ய ஜனாதிபதியின் கிரம்ளின் மாளிகை ஆலோசகர் யூரி உசாகோ கூறினார்.

## அகதிகள் விவகாரம்:

# அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்துக்கு நீதிமன்று அதிரடி உத்தரவு

வொஷிங்டன், ஜூலை 16

அகதிகள் விவகாரத்தில் குழந்தைகளை பெற்றோருடன் இணைப்பதற்கு ஏற்படும் செலவை அரசுதான் ஏற்க வேண்டும் என ட்ரம்ப் நிர்வாகத்துக்கு நீதிபதி அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்க எல்லைக்குள் உரிய ஆவணங்கள் இன்றி சட்ட விரோதமாக நுழைந்த அகதிகளையும், அவர்களது குழந்தைகளையும் பிரித்து காவலில் வைக்கும் கொள்கையை ட்ரம்ப் நிர்வாகம் அமுல்படுத்தியது.

இதன்படி, அங்கு சுமார் 2 ஆயிரம் குழந்தைகள், பெற்றோர்களிடம் இருந்து பிரித்து வைக்கப்பட்டனர். இது அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ட்ரம்பின் அகதிகள் கொள்கைக்கு அவரது மனைவி மெலனியா ட்ரம்ப், மகள் இவான்கா ட்ரம்ப் ஆகியோரும்கூட எதிர்ப்பு தெரிவித்தனர். கடைசியில் ட்ரம்ப் பணிந்தார். அகதிகளையும், அவர்களது குழந்தைகளையும் பிரிக்கும் கொள்கையை திரும்பப்பெற்றார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க மனித உரிமை யூனியன் ஒரு வழக்கை கலிபோர்னியா மாகாணம், சாண்டீகோவில் உள்ள நீதிமன்றம் தொடுத்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டானா சாப்ரா, பிரித்து வைக்கப்பட்ட குழந்தைகளை மீண்டும் பெற்றோர்களுடன் கொண்டு வந்துசேர்ப்பதற்குஆகிறசெலவை பெற்றோர்கள் தர வேண்டியது



இல்லை. அமெரிக்க அரசுதான் இந்தச் செலவை ஏற்க வேண்டும் என்று அதிரடியாக உத்தரவிட்டார்.

முதலில் ஒரு குழந்தையை பெற்றோருடன் இணைப்பதற்கு பெற்றோர் சுமார் 2 லட்சத்து 29 ஆயிரம் வழங்க வேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிகாரகுவாவில் ஜனாதிபதிக்கு எதிராகப் பெரும் போராட்டம்:

## துப்பாக்கிச் சூட்டில் மாணவர் பலி

தென் அமெரிக்காவில் உள்ள நிகாரகுவா நாட்டில் ஜனாதிபதி பதவி விலக வலியுறுத்தி போராட்டத்துக்கு திரண்ட மாணவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியமையால் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தென் அமெரிக்க நாடான நிகாரகுவாவில் அதிபராக டேனியல் ஓர்டெகா பதவி வகிக்கிறார். இவர் பதவி விலக வலியுறுத்தி நாடு முழுவதும் போராட்டம் நடந்து வருகிறது. இந்தப் போராட்டத்தின் போது இது வரை 300 பேர் பலியாகி உள்ளனர்.

இந்த நிலையில், நாடு தழுவிய ஒருநாள் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதை தொடர்ந்து தலைநகர் மனாகுவாவில் போராட்டம் வலுவடைந்தது. அதில் பாடசாலை, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

ஆயிரக்கணக்காக திரண்ட மாணவர்களின் போராட்டத்தை ஒடுக்க துணை ராணுவம் அனுப்பப்பட்டது. அப்போது அங்கு வந்த ராணுவம் மாணவர்கள் மீது தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியது.

இதனால் மிரண்டு ஓடிய மாணவர்கள் பல்கலைக் கழகம் அருகேயுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் புகுந்தனர். பின்னர் தேவாலயத்தின் கதவுகள் மூடப்பட்டன. மாணவர்களுடன் பாதிரியார்கள் மற்றும் நிருபர்களும் தஞ்சம் அடைந்தனர்.

ஆனால் ராணுவமும் பொலிஸாரும் அவர்களை விடாமல் தேவாலயத்தை சுற்றி முற்றுகையிட்டு தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். அதில் மாணவர் ஒருவர் பலியானார். அதே நேரத்தில் மேலும் ஒரு மாணவர் உயிரிழந்தார் எனவும் பலர் காயம் அடைந்தனர் என்றும் அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ராவல்பிண்டி சிறையில் நவாஸ் ஷெரீப்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் (வயது 68) ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டார். அவரது மகள் மரியம் (வயது 44) அதே சிறையின் பெண்கள் பிரிவில் அடைக்கப்பட்டார்.

லண்டனில் சட்டவிரோதமாக 4 வீடுகளை வாங்கியது தொடர்பான வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கு கடந்த 6 ஆம் திகதி 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதே வழக்கில் அவரது மகள் மரியத்துக்கு 7 ஆண்டுகளும் மரியத்தின் கணவர் கேப்டன் சப்தாருக்கு ஓராண்டு சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், கேப்டன் சப்தார் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டார்.

நவாஸின் மனைவி குல்சூம் புற்றுநோய் காரணமாக லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றமையால் அவரது குடும்பத்தினர் லண்டனில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் நவாஸும் அவரது மகள் மரியமும் கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் இருந்து லாகூர் வந்தனர். விமான நிலையத்தில் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அங்கிருந்து தனி விமானத்தில் நவாஸும் மரியமும் இஸ்லாமாபாத் அழைத்து வரப்பட்டனர். பின்னர் ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் நவாஸ் ஷெரீப் அடைக்கப்பட்டார். அதே சிறையின் பெண்கள் பிரிவில் மரியம் அடைக்கப்பட்டார். இருவருக்கும் பி வகுப்பு சிறை ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறையில் அடைப்பதற்கு முன்பாக இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக விலக்கு கோரப்பட்டது. அதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் வாசிம் அகமது நேரடியாக அடியாலா சிறைக்குச் சென்று இருவரையும் சிறையில் அடைப்பதற்கான வாரன்டை வழங்கினார். மாஜிஸ்திரேட் முன்னிலையில் இருவருக்கும் உடல்நலப் பரிசோதனை நடத்தப்பட்டது.

விரைவில் மேல்முறையீடு இஸ்லாமாபாத்தில் உள்ள தேசிய பொறுப்புடமை நீதிமன்றம் நவாஸ், மரியம், கேப்டன் சப்தாருக்கு சிறை தண்டனை விதித்துள்ளது. இதை எதிர்த்து 3 பேர் தரப்பில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் விரைவில் மேல் முறையீடு செய்யப்படும் என்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானில் எதிர்வரும் 25 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் மக்களின் அனுதாபத்தைப் பெறவே நவாஸும் மரியமும் லாகூருக்கு திரும்பி சிறைக்குச் சென்றிருக்கின்றனர் என எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

நவாஸ் ஷெரீப் கைது செய்யப்பட்டமையை எதிர்த்து லாகூர் உட்பட பல்வேறு நகரங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. இதில்பொலிஸாருக்கும்நவாஸின் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதில் 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய நாடாளுமன்ற தேர்தலுக்காக கூட்டணி அமைக்க கட்சிகள் தீவிரம்

## சென்னை வருகிறார் சோனியா

அடுத்த ஆண்டு இந்திய நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால் மாநில கட்சிகளை எப்படியாவது தங்களுடன் கூட்டணி அமைப்பதில் தேசியக் கட்சிகள் தீவிரமாகி உள்ளன.

இந்த நிலையில், காங்கிரஸ் தலைவி சோனியா அடுத்த மாதம் சென்னைக்கு வருகிறார்.

பெப்ரவரி மாதம் தேர்தல் திகதி .அட்டவணை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் அறிவிப்பு வெளியாக 7 மாதங்களே உள்ள நிலையில் மீண்டும் ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று பா.ஜனதா தலைவர்கள் தீவிரமாக உள்ளனர். ஆனால், எப்படியாவது ஆட்சியை மீண்டும் பிடித்துவிட வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் துடிக்கிறார்கள்.

இந்த நிலையில், பா.ஜனதா தலைவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பிரசார பணியை தொடங்கிவிட்டனர். அதைத் தொடர்ந்து பா.ஜனதா மற்றும் காங்கிரஸ் இரு கட்சிகளும் மாநில அளவில் வலுவாக உள்ள கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் பேச்சுகளை தொடங்கிவிட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்பு சென்னை வந்த பா.ஜனதா தலைவர் அமித்ஷா 'தமிழகத்தில் பா.ஜனதா வலுவான கூட்டணியை அமைக்கும். செப்ரெம்பர் மாதம் கூட்டணி தொடர்பான பேச்சுகள் தொடங்கும்' என்று அறிவித்தார்.

தமிழகத்தை பொறுத்தவரை தேசிய கட்சிகளுக்கு மிகப்பெரிய செல்வாக்கு எதுவும் இல்லாததால் பிரதான கட்சிகளான அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய கட்சிகளை முன்னிலைப்படுத்தியே கூட்டணிகள் அமையும். அந்த கூட்டணிகளே வெற்றி வாய்ப்பையும் பெறும்.

தற்போது காங்கிரஸ், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ளது. இருந்தாலும் சமீப காலமாக இரு கட்சிகளுக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை. டெல்லி தலைவர்கள் எடுக்கும் முடிவு ஒருவிதமாக இருக்கிறது. தமிழக நிர்வாகிகள் எடுக்கும் முடிவு இன்னொரு விதமாக இருக்கிறது.

தமிழக காங்கிரஸில் அ.தி.மு.க. உறவை விரும்பும் தலைவர்களும் உண்டு. தி.மு.க. உறவை விரும்பும் தலைவர்களும் உண்டு. இந்த தலைவர்கள் அவர்கள் விரும்பும் கட்சியுடனேயே கூட்டணி அமைய வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அரசியல் களத்தில் இறங்கி இருக்கும் கமல்ஹாசன் டில்லியில் ராகுல்காந்தியை சந்தித்தது புது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

காங்கிரஸ், கமல்ஹாசனின் மக்கள் நீதிமய்யம், டி.டி.வி.தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஆகிய கட்சிகள் கைகோத்து புதிய அணியாக நாடாளுமன்ற தேர்தலில் இறங்கலாம் என்ற பேச்சு அடிபடுகிறது.

இது தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியில் நெருடலை அதிகப்படுத்தி இருக்கிறது. ஏற்கனவே அ.தி.மு.க.வை எந்தப்பக்கமும் திரும்ப முடியாதபடி மத்திய பா.ஜனதா அரசு கிடுக்கிப்பிடி போட்டு வைத்துள்ளது.

அமித்ஷா 'வலுவான கூட்டணி அமைப்போம்' என்று கூறியிருக்கின்றமை அ.தி.மு.க.வை மனதில் வைத்துதான் என்றே கூறப்படுகிறது.

இதுபற்றி பா.ஜனதா மூத்த தலைவர் ஒருவர் கூறும் போது -

அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதில் தப்பில்லை. எங்களை பொறுத்தவரை அ.தி.மு.க., தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஒரே மாதிரிதான். இரு கட்சிகளுமே எங்களோடு கூட்டணி வைத்த கட்சிகள்தான். எங்கள் கூட்டணியில் இருந்தபோது அந்த கட்சிகள் ஊழலில் ஈடுபடவில்லை. சேரும் இடத்தை பொறுத்து தான் செயல்பாடுகள் இருக்கும். எனவே ஊழல் பெரிய பிரச்சினை இல்லை' என்றார்.

இதன்மூலம் பா.ஜனதா - அ.தி.மு.க. கூட்டணி உருவாகும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே காங்கிரஸுடனான கூட்டணியை உறுதிப்படுத்துவதில் தி.மு.க.வும் தீவிரமாக இறங்கி இருக்கிறது. இதற்கு அடுத்த மாதம் சென்னையில் தி.மு.க. நடத்த இருக்கும் மாநில சுயாட்சி மாநாட்டை தக்க தளமாக பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்து இருக்கிறது. ஏற்கனவே, அகில இந்திய அளவில் பா.ஜனதாவுக்கு எதிராக வலுவான கூட்டணியை அமைக்கும் முயற்சியில் 'மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, ஆந்திர முதல்வர் சந்திரபாபுநாயுடு ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய அளவில் மோடிக்கு எதிராக அணி சேரும் கட்சிகளுடன் இணைய தி.மு.க.வும் ஆர்வமாக இருக்கிறது. அதே நேரத்தில் இந்த அணியில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளும் இடம்பெற வேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தி வருகிறது.

எனவே தி.மு.க. நடத்தும் மாநில சுயாட்சி மாநாட்டுக்கு பா.ஜனதாவுக்கு எதிரான அனைத்து தலைவர்களையும் அழைத்துள்ளனர்.

கர்நாடகாவில் காங்கிரஸ் துணையுடன் மதசார்பற்ற ஜனதாதளம் ஆட்சி அமைத்துள்ளது. குமாரசாமி பதவி ஏற்பு விழாவுக்கு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் செல்வதாக இருந்தது. ஆனால் தூத்துக்குடி சம்பவம் காரணமாக அவர் செல்லவில்லை. எனவே மாநில சுயாட்சி மாநாட்டில் அவரையும் அழைத்து கௌரவிக்க முடிவு செய்துள்ளார்கள்.

காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி, சோனியா ஆகியோரை டெல்லியில் திருச்சி சிவா நேரில் சந்தித்து மாநாட்டு அழைப்பிதழை வழங்கினார்.

தி.மு.க. ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டுக்கு சோனியா வருகிறார். அவருக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி மீது தனி மரியாதை உண்டு. தனது உடல்நிலை காரணமாக சோனியாவும் அதிகமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை தவிர்த்து வருகிறார். இருவரும் சந்தித்து பேசி நீண்ட நாள்கள் ஆகிவிட்டன.

தனது சென்னை வருகையின்போது கருணாநிதியை சந்திக்கவும், கூட்டணி தொடர்வதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

மேலும் சோனியாவின் வருகையால் காங்கிரஸுடனான கூட்டணியை உறுதிப்படுத்த முடியும் என்று தி.மு.க. நம்புகிறது.

இனி, கூட்டணிகள் அமைப்பதற்கான காட்சி அமைப்புகள் தீவிரம் ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த தமிழக சட்டப் பேரவை தேர்தல் நாடாளுமன்ற தேர்தலுடன் நடைபெறும்

## தினகரன் கருத்து

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நாடாளுமன்ற தேர்தலுடன் நடைபெறும் என்று டி. டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக டி.டி.வி.தினகரன் மேலும் தெரிவிக்கையில் -

தமிழகத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக மக்கள் விரோத, ஊழல் ஆட்சி நடைபெறுவது பாமரனுக்கே தெரியும். டில்லியிலிருந்து வந்து அமித்ஷா சொன்னால் தான் ஏற்றுக் கொள்வீர்களா. ஊழல் ஆட்சி தான் நடக்கிறது.

முறைகேடுகள் நிறைந்த ஆட்சி. இந்தியாவிலேயே ஊழலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. அதனால் தான் இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலும் வந்துவிடும். இந்த ஆட்சியின் அனைத்து ஊழல்களும் தானாகவே வெளியே வந்துவிடும். யாரால் பழனிசாமியும், பன்னீர் செல்வமும் கைகோத்தார்களோ அவர்களே இந்த ஆட்சியின் அவலத்தை வெளியே கொண்டு, முடிவுக்கு கொண்டு வந்து விடுவார்கள்.

இவர்கள் இருவரையும் அரசியலிலிருந்து அப்புறப்படுத்தும் காலம் வெகு விரைவில் வர உள்ளது. என் மீது புனையப்பட்ட அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, மக்கள் ஆதரவுடன் நாங்கள் ஆட்சியமைப்போம்.

அதற்கான காலம் விரைவில் கனியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஆந்திராவில் படகு விபத்து: 7 பேர் மாயம், 23 பேர் மீட்பு!



ஆந்திர மாநிலம் கவுதமி ஆற்றில் பயணிகள் படகு நீர்ச்சுழலில் சிக்கி பாலத்தின் தூணில் மோதிய விபத்தில் படகில் இருந்த 30 பேர் ஆற்றுக்குள் விழுந்தனர். இதில் 23 பேர் மீட்கப்பட்ட நிலையில் 7 பேர் காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பசுவுல்லங்கா என்னும் இடத்தில் இருந்து சலாதிவரி பாலெம் என்னும் இடம் நோக்கி பயணிகள் ஒரு படகு நேற்று முன்தினம் மாலை கவுதமி ஆற்றில் சென்று கொண்டிருந்தது. இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் ஆவர்.

இந்த நிலையில், நீர்ச்சுழலில் சிக்கிய அந்த படகு ஆற்றின் மீது கட்டப்பட்டு வரும் பாலத்தின் தூண் ஒன்றின் மீது பயங்கரமாக மோதி கவிழ்ந்தது. இதனால் படகில் இருந்த 30 பேரும் ஆற்றுக்குள் விழுந்து தத்தளித்தனர். இதையடுத்து விசாகப்பட்டினம் மற்றும் ராஜமகேந்திரவரம் நகரங்களில் இருந்து தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்களுடன் உள்ளூர் பொலிஸாரும் இணைந்து 23 பயணிகளை பத்திரமாக மீட்டனர்.

எனினும் மற்ற 7 பேரை காணவில்லை. அவர்களின் கதி என்ன என்பது உடனடியாக தெரியவரவில்லை. அவர்களை தேடும்பணி தொடர்ந்து நீடித்து வருகிறது என மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

# சசிகலா குடும்பத்தினருக்கு அ.தி.மு.க. மறைமுக ஆதரவு



- ஜெ.தீபா

அ.தி.மு.கவில் உள்ள மூத்த தலைவர்கள் சசிகலா குடும்பத்தை இன்னும் மறைமுகமாக ஆதரித்து வருகின்றனர் என மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ.தீபா குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் ஜெ.தீபா நேற்று செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில் -

அ.தி.மு.கவின் தலைமைப்பொறுப்பை நான் ஏற்க வேண்டும் என்றுதான் பெரும்பான்மை மக்கள் விரும்புகின்றனர். அதிமுகவில் உள்ள மூத்த தலைவர்கள், நிர்வாகிகள் சசிகலா குடும்பத்தை இன்னும் மறைமுகமாக ஆதரித்து வருகின்றனர்.

அ.தி.மு.கவை வழிநடத்தும் இடத்தில்தான் தொண்டர்கள் என்னை வைத்துப் பார்க்கின்றனர். எனவே, அ.தி.மு.கவில் இணைந்து செயல்பட நான் தயாராக இருக்கிறேன். முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர்தான் நான் இணைய தடையாக இருக்கின்றனர்.

மக்களவை துணைத் தலைவர் தம்பிதுரை கரூரில் செய்தியாளர்களை சந்தித்த போது தீபா யார் என்று சொல்லி கேலி செய்து சிரித்துள்ளார். அவர் மீது அவமதிப்பு வழக்கு தொடர்வேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

# காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

தமிழகத்துக்கு வினாடிக்கு 1 லட்சம் கனஅடி உபரி நீர் திறந்து விடப்படுவதால், காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் கடந்த சில நாள்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள அணைகளில் நீர் நிரம்பி வருகின்றன. இந்த நிலையில் கர்நாடக அணைகள் நிரம்பி வழிவதால் தமிழகத்திற்கு விநாடிக்கு 1 லட்சம் கன அடி உபரி தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

கே.ஆர்.எஸ். அணையில் இருந்து தமிழகத்திற்கு விநாடிக்கு 60 ஆயிரம் கனஅடி தண்ணீர் மற்றும் கபினி அணையில் இருந்து விநாடிக்கு 40 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேட்டூர் அணை முதல் எடப்பாடி வரை காவிரி கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. இதேபோன்று ஒகேனக்கல் முதல் மேட்டூர் அணை வரையிலான பகுதி மக்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடத்தனையில் உள்ள அவரது பெற்றோர் வீட்டினுள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் உட்புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த மாகாண சபை உறுப்பினரின் தந்தையார் மீது தாக்குதலை மேற்கொண்ட பின்னர் கொள்ளையில் ஈடுபட்டனர்.

தாயாரின் நகைகள் 6 பவுண் மற்றும் உண்டியலில் சேர்த்த சுமார் 40 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை அவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

6 பேர் கொண்ட கும்பலே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

வீட்டினுள் சுமார் 45 நிமிடங்கள் அவர்கள் தேடுதல் நடத்தியுள்ளனர். அத்துடன் வீட்டில் இருந்த மூன்று கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அடித்துநொருக்கிவிட்டுக்கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம்நடைபெற்றவேளை, மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் வெளியூர் சென்றிருந்தார். அவரது சகோதரரும் அன்று வீட்டில் இல்லை.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைஅடுத்துச்சம்பவஇடத்துக்கு மோப்பநாய்கள்சகிதம்விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொசான் பெர்னாண்டோவின் சிறப்புப் பொலிஸ் நடவடிக்கை எதிர்வரும் 18ஆம் திகதிவரை நடைமுறையிலுள்ள நிலையில் இடம்பெற்ற மற்றொரு குற்றச் செயல்இதுவாகும்என்பதுகுறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## அப்பாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற்போனோர் செயலகத்தின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே சிறுமி இந்த உருக்கமான கோரிக்கையை விடுத்தார்.

இதனால்அமர்வுநடந்தமண்டபத்தில் இருந்த கிராம அலுவலர்கள் உட்பட பலர் கண்ணீர் விட்டு அழுதனர்.

2009மேமாதம்அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அவர்களுடன் நூற்றுக்கணக்கான போராளிகள் உட்படப் பலர் இராணுவத்திடம் சரணடைந்திருந்தனர். இவர்களை இராணுவத்தினர் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் ஏற்றிச் சென்றிருந்தனர். இதற்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாட்சியாக இருக்கின்றனர்.

இதன்போது விடுதலைப் புலிகளின் திரைப்படப் பிரிவில் கடமையாற்றிய திலக் என்பவரும் சரணடைந்திருந்தார். அவரது ஒன்பது வயது மகளே நேற்று காணாமற்போனோர் செயலக அதிகாரிகளிடம் மிக உருக்கமான கோரிக்கையை விடுத்தார்.

தனது அப்பாவைத் தேடித் தாருமாறும், தான் இதுவரை அப்பாவின் முகத்தைப் பார்க்கவில்லை என்றும் அவர் அங்கு கூறினார்.

இதன்போது மண்டபத்தில் இருந்த கிராம அலுவலர்கள் உட்படபலர்கண்ணீர்விட்டுஅழுதனர்.

இந்தச் சிறுமி 2009 ஆம் ஆண்டுபதுங்குழிக்குள்பிறந்த குழந்தைஎன்றும், தனதுஅப்பாவின் முகத்தைக் காணாதவர் என்றும் அவரது அம்மம்மா குறிப்பிட்டார். (ஐ)

## காணாமற்போனோர் செயல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் எங்களுக்குத் தீர்வுகள் எதுவும்கிடைக்கப்போவதில்லை என்று தெரிவித்து நேற்றுக் கிளிநொச்சியில்காணாமற்போனோரின் உறவினர்கள் ஆர்ப்புாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று அங்கு இடம்பெற்ற காணாமற்போனோர் செயலகத்தின் அமர்வைப் புறக்கணித்தே உறவினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் காணாமற்போனோர்செயலகத்தின்தலைவர் மற்றும் ஆணையாளர்களுடனான கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்குத் தமது கடுமையான எதிர்ப்பைத்தெரிவித்த காணாமற்போனோரின் உறவினர்கள் அது குறித்து பின்வருமாறு தெரிவித்தனர்:-

இந்த அலுவலகம் சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தவதற்கும் காலத்தைக் கடத்துவதற்குமானது, கடந்த காலங்களில் இதுபோன்றே பல ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால்அவைமூலம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்துக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை.

இவ்வாறான ஆணைக்குழுக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் நியாயங்களைத் திருப்திப்படுத்தாதவகையில் முன் வைத்த பரிந்துரைகளைக் கூட அரசு நடைமுறைப்படுத்தவில்லை. எனவே இந்த நிலையில் தற்போது இந்த அலுவலகமும் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் எங்களைப் பொறுத்தவரை கடந்த காலத்தின் அனுபவத்தின் வெளிப்பாடாக இந்த அலுவலகத்தின் மீது நம்பிக்கையீனம்ஏற்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களான நாம் இந்த அலுவலகத்தை நிராகரிக்கின்றோம்.

எங்களுக்கு உறவுகளே தேவை. அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது? எங்களால் நேரடியாக முல்லைத்தீவிலும், ஓமந்தையிலும் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட உறவுகளுக்குப் பதில் சொல்லுங்கள். செட்டிக்குளம் முகாம்களிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே? அருட்தந்தையுடன் சரணடைந்தவர்கள் எங்கே? - எனக்கோரிக்கை விடுத்தனர்.

நேற்றைய கலந்துரையாடலுக்கு என நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமண்டபத்தின்பெரும்பகுதி வெறுமையாகக் காணப்பட்டது. ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட உறவினர்கள்பிற்பகல் இரண்டு மணிவரை கூட்டுறவாளர் மண்டப வாயிலில் நின்று தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தனர். (ஐ)

## போதைப்பொருளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டில் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போதுபஸ்நிலையத்தில் வைத்து போதைப் பொருளுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

வலி. கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ் உள்ளிட்ட உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ-7)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வவுனியாவில் தனது மாகாண சபை உறுப்பினர்களோடு கூடிய ரெலோவின் அரசியல் குழு இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றது என நம்பகரமாக அறிய வந்தது.

இன்று காலை சபை கூடியதும் இவ்விடயத்தை ஒட்டி ரெலோவின் நிலைப்பாட்டை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சபையில் விடுப்பார். அது பெரும்பாலும், முதல்வர் விக்னேஸ்வரனுக்கு சார்பானதாகவும், டெனிஸ்வரன் மற்றும் முன்னைய அமைச்சர்கள் விடயத்தில் ஆளுநர் தனது கடப்பாட்டைச் சரிவர ஆற்றத் தவறியமையைக் குறை சொல்வதாகவும் அமையக்கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அந்த அறிக்கையை சபையில் வாசித்த பின்னர் இந்த விவாதத்திலிருந்து ரெலோ உறுப்பினர்கள் ஒதுங்கிக் கொள்வர்.

இத்தகைய முடிவு ஒன்றே நேற்றைய அரசியல் குழுவின் கூட்டத்தில் எட்டப்பட்டதாகவும் அறியவந்தது.

நேற்றைய கூட்டத்தில்ரெலோவின் அரசியல்குழு உறுப்பினரும் மாகாண சபை உறுப்பினருமான சிவாஜிலிங்கம் பங்குபற்றவில்லை. ஒரு தனிப்பட்ட அலுவலாகக்கொழும்புசென்றிருந்தமையால்கூட்டத்தில்அவர் கலந்து கொள்ள இயலவில்லை எனக் கூறப்பட்டது.

ரெலோவின் அரசியல் குழுவில் இல்லாத போதிலும் வடக்கு மாகாணசபையில் அக்கட்சியின் உறுப்பினராக உள்ளார் என்ற அடிப்படையில் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்த வடக்கு சுகாதார அமைச்சர் வைத்தியர் குணசீலனும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றவில்லை. அவரும் பிறிதொரு நிகழ்வில் பங்குபற்ற வேண்டியிருந்தமையால் வரமுடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் அரசியல் குழுவின் ஏனைய உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் அக்கட்சி உறுப்பினர்களும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றினர்.

நேற்று முற்பகல் 11 மணி தொடக்கம் 1மணி வரை இக்கூட்டம் நடைபெற்றது. (உ)

## நிறைவேற்றதிகாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் விடுதலை முன்னணியினர் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணையில் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை விசேட அம்சமாகக் காணப்படுகின்றது.

இருப்பினும் இந்த விடயத்துக்கு ஆதரவுவழங்க போவதில்லையென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவினர் தீர்மானித்துவிட்டனர்.

மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதிய அரசமைப்பு திருத்தம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை விருப்பைப் பெறவேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவும் தேவை என வாக்குவாதம் செய்கின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் முறையைற்ற பொருளாதார கொள்கைகளே இன்று நாட்டில் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கூட்டரசு கலைக்கப்பட்டால் மாத்திரமே மீண்டும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அனைத்து தரப்பினரையும் ஒன்றுதிரட்டி சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவதே எமது தற்போதைய அரசியல் நோக்கம்.

எனவே மக்கள் விடுதலை முன்னணியினர் முன்வைத்த 20 ஆவது அரசமைப்பு திருத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றுஅதிகாரமிக்கஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பூரண ஆதரவை வழங்க வேண்டும். - என்றார். (ஐ)

## காணாமற்போனோர் பிரச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பெற்றுக் கொடுக்க முயற்சிப்போம் என அந்த அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற காணாமற்போனோர் அலுவலகத்தின் அமர்வை அடுத்து, செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமற்போனோர் அலுவலகம் கிளிநொச்சியில் நடத்திய அமர்வில் காணாமற்போனோரின் உறவினர்கள் மிகக்குறைந்த அளவிலேயே பங்கேற்றனர்.

மக்களுக்கு ஆர்ப்பாட்டம் நடத்தஉரிமைஉண்டுஎன்பதை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். இந்த அலுவலத்தின் மீது நம்பிக்கையில்ல, இதனால் அதில் பங்கேற்க மாட்டோமெனக் கூற அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு. அவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்துபவர்கள், இதில் கலந்துகொள்ளவிருப்பத்துடன் வந்தவர்களைமதிக்கவேண்டும். அவர்களை இதில் பங்கேற்பதற்கு அனுமதிக்கவேண்டும். அதைவிடுத்து இதில் பங்கேற்ற வந்த காணாமற்போனோரின் உறவினர்களை பங்கேற்றவிடாமல் பலவந்தமாகத் தடுப்பது சரியானதல்ல.

இந்த அலுவலகம் நிரந்தரமானது, இதன் செயற்பாடுகள் ஓரிரு வாரங்களிலோ, ஓரிரு மாதங்களிலோ நிறைவடையாது. எனவே நாம் தொடர்ச்சியாக காணாமல் போனோரின் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்திப்போம். இந்த இடத்தில் மாத்திரம் அல்ல. நாம் பல்வேறு இடங்களிலும் சந்திப்புக்களை நடத்தி, காணாமல் போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முய்ற்சிப்போம். - என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் சிலபணிகள்தொடர்பிலும்அரசியல்வாதிகளாலும், ஊடகங்களிலும் பிழையான செய்திகள் வெளியிடப்படுகின்றன எனவும், இதனால் நாட்டு மக்கள் மத்தியில், இராணுவம் தொடர்பிலான தவறான அபிப்பிராயம் ஏற்படுவதாகவும்அவர் ஊடகங்ளுக்கு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போதும், அதன் பின்னரும்இராணுவம்நிர்வாகக் கடமைகளுக்கு அப்பால் பல்வேறு அபிவிருத்தி மற்றும் சமூகப்பணிகளை மேற்கொண்டுள்ளது. பிரதானமாக நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டுள்ள படையினரை அகற்றி அவர்களை வேறு கடமைகளுக்காக ஈடுபடுத்தி இராணுவத்தினரது சேவைகளை இரண்டுமடங்காக உயர்த்தியுள்ளோம் என அந்த அறிக்கையில்அவர்குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இராணுவ முகாமிலிருக்கும் கூடுதலான படையினர் அவசரஇயற்கைஅனர்த்தங்கள் மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பணிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். இதனால் முகாம்கள் மூடப்படுகின்றன எனவும், பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் வடக்கு கிழக்கில் ஏற்படுவதாகவும் செய்திகள் வெளியாகின்றன -எனவும் அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேசிய பாதுகாப்புக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் இராணுவத்தினால் மேற்கொள்ளப்படாது. தேசிய பாதுகாப்பு முன்னுரிமை என்று கருதப்படுவதால், இராணுவத்தினால் இராணுவ முகாம்கள் மூடப்படாது என்பதை வலியுறுத்துகிறோம். கூடுதலான படையினர் நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் மேற்கொள்ளும் அபிவிருத்து திட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர். இருந்தபோதிலும் சில அரசியல்வாதிகள் மற்றும் ஊடகங்களினால் இராணுவத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் வெளியிடப்படும் செய்திகளை நம்பவேண்டாம் எனப் பொதுமக்களை கேட்டுக்கொள்கிறோம். - என அந்த அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூக்கிலிட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்க்கொல்லி போதைப் பொருள்களை கடத்தல் - பதுக்கல் - விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு மேல் நீதிமன்றால் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எனினும்அந்தத்தண்டனைத் தீர்ப்புநிறைவேற்றப்படுவதில்லை.

நாடாளுமன்றத்தின் தீர்மானத்துக்கு அமைவாக இலங்கை மாகாண மேல் நீதிமன்றங்களால் விதிக்கப்படும் தூக்குத் தண்டனைகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவுகள் ஜனாதிபதிகளினால் விடுவிக்கப்படுவதில்லை.

மாறாக, தூக்குத்தண்டனைக் கைதிகளின் தண்டனை சுமார் 15 ஆண்டுகளில் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படுகின்றன.

இந்த நிலையில் போதைப் பொருள்கள் குற்றத்துக்கு விதிக்கப்படும் தூக்குத் தண்டனை குற்றத்தீர்ப்பைநிறைவேற்றுவது என அமைச்சரவை கடந்த வாரம் ஏகமனதாகத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய 18 கைதிகளின் விவரங்களைச் சிறைச்சாலைகள் திணைக்களம் நீதி அமைச்சரிடம் கையளித்தது.

நீதி அமைச்சு உரிய நடவடிக்கைகளுடன் தண்டனையை நிறைவேற்றுமாறு ஜனாதிபதிக்குப் பரிந்துரை வழங்கும்.

ஜனாதிபதி,தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படும் நாள், இடம் போன்றனவற்றைத் தீர்மானித்து சிறைச்சாலைகள் திணைக்களத்துக்குக் கட்டளையை வழங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் இறுதியாக 1976ஆம் ஆண்டில் தூக்குத் தண்டனைநிறைவேற்றப்பட்டது.

(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்) (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir




# உலகக் கிண்ண உதைபந்து:

# 3 ஆவது இடம் பெல்ஜியத்துக்கு!

## 2 - 0 கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தியது





உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியில் பெல்ஜியம் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை சாய்த்து 3ஆவது இடத்தை பிடித்தது.

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில், செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நேற்று நடந்த 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் பெல்ஜியம் அணி, முன்னாள் சாம்பியன் இங்கிலாந்தை எதிர் கொண்டது.

முந்தைய ஆட்டத்தில் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த தாமஸ் முனீர் பெல்ஜியம் அணிக்கு திரும்பினார். இங்கிலாந்து 5 மாற்றங்களுடன் களம் இறங்கியது. ஆட்டம் தொடங்கிய 4 ஆவது நிமிடத்திலேயே பெல்ஜியம் வீரர் தாமஸ் முனீர், சக வீரர் நாசெர் சாட்லி தட்டிக்கொடுத்த பந்தை கோலாக்கி அமர்க்களப் படுத்தினார்.

இந்த உலகக் கிண்ணத்தில் பெல்ஜியம் தரப்பில் கோல் அடித்த 10 ஆவது வீரர் முனீர் ஆவார். இதன் மூலம் ஓர் உலக கோப்பையில் அதிக வீரர்கள் கோல்கள் போட்ட அணியான பிரான்ஸ் (1982 ஆம் ஆண்டு), இத்தாலி (2006ஆம் ஆண்டு) ஆகிய அணிகளின் சாதனையை பெல்ஜியம் சமன் செய்தது.

இங்கிலாந்து வீரர்கள் பதிலடி கொடுக்க கடுமையாக முயன்றனர். பந்து இவர்கள் வசமே சற்று அதிகமாக (57 சதவீதம்) சுற்றிக் கொண்டிருந்தது. நிறைய 'ஷாட்டுகளும்' அடித்தனர். ஆனால் பலம் வாய்ந்த பெல்ஜியத்தின் தடுப்பு வளையத்திற்குள் வெற்றிகரமாக ஊடுருவ முடியவில்லை. அதே சமயம் 82 ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் அணித் தலைவர் எடன் ஹசார்ட் ஒரு கோல் போட்டார்.

முடிவில் 'ரெட் டெவில்ஸ்' என்று அழைக்கப்படும் பெல்ஜியம் அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை பதம் பார்த்து 3 ஆவது இடத்தை பிடித்ததோடு, அதற்குரிய வெண்கலப்பதக்கத்தையும் சொந்தமாக்கியது. உலகக் கிண்ண போட்டி வரலாற்றில் பெல்ஜியத்தின் சிறந்த செயல்பாடு இதுவாகும். இதற்கு முன்பு 1986 ஆம் ஆண்டு 4 ஆவது இடத்தை பிடித்ததே சிறந்த நிலையாகும். அந்த அணிக்கு இந்தியப் பணத்தில் ரூ.161 கோடி பரிசாக கிடைத்தது.

ஏற்கனவே லீக் சுற்றிலும் பெல்ஜியத்திடம் தோற்று இருந்த இங்கிலாந்து அணி மீண்டும் சறுக்கலை சந்தித்து 4 ஆவது இடத்தையே பெற முடிந்தது. அதற்குரிய பரிசுத்தொகையாக இங்கிலாந்து அணிக்கு ரூ.148 கோடி வழங்கப்பட்டது

# கிரிக்கெட்டில் இந்தியாவை வீழ்த்தியது இங்கிலாந்து

லண்டன், ஜூலை 16

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி படுதோல்வி அடைந்தது.

இந்தியா–இங்கிலாந்து அணிகள் இடையிலான 2 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸில் நேற்று முன்



தினம் நடந்தது.


இதில் 'டாஸ்' ஜெயித்த இங்கிலாந்து முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. இதன்படி தொடக்க ஆட்டக்காரர்களாகக் களம் புகுந்த ஜாசன்ராயும், ஜானி பேர்ஸ்டோவும் முதல் விக்கெட்டுக்கு 69 ஓட்டங்கள் சேர்த்தனர். முந்தைய ஆட்டத்தைப் போன்றே சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் தனது முதல் ஓவரில் இங்கிலாந்தின் தொடக்க ஜோடியை பிரித்தார். அவரது பந்தில் முட்டிப்போட்டு அடிக்க முயன்ற பேர்ஸ்டோ (38 ஓட்டங்கள்) கிளீன் போல்டு ஆனார். அவரது இன்னொரு ஓவரில் ஜாசன் ராயும் (40 ஓட்டங்கள்) வெளியேற்றப்பட்டார்.

இதன் பின்னர் ஜோ ரூட்டும், கேப்டன் மோர்கனும் இணைந்து ஓட்டங்களைச் சீரான வேகத்தில் நகர்த்தினர். ஸ்கோர் 189 ஓட்டங்களாக உயர்ந்த போது மோர்கன் (53 ஓட்டங்கள், 51பந்து, 4 பவுண்டரி, ஒரு சிக் சர்) குல்தீப் யாதவின் சுழலில் சிக்கினார். அடுத்து வந்த பென் ஸ்டோக்ஸ் (5 ஓட்டங்கள்), ஜோஸ் பட்லர் (4 ஓட்டங்கள்), மொயீன் அலி (13 ஓட்டங்கள்) தாக்குப்பிடிக்கவில்லை. இதில் இருவரது கேட்ச்சை பிடித்த விக்கெட் கீப் பர் டோனி, ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில் 300 கேட்ச்கள் செய்த 4ஆவது விக்கெட் கீப்பர் என்ற சிறப்பை பெற்றார்.

நெருக்கடியான சூழலில் 7ஆவது விக்கெட்டுக்கு ஜோ ரூட்டுடன், டேவிட் வில்லி கைகோர்த்தார். வில்லி, அதிரடி காட்டி ஓட்டங்களை மளமளவென எகிற வைத்தார். மறுமுனையில் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோ ரூட் தனது 12 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். 113ஓட்டங்கள் (116 பந்து, 8 பவுண்டரி, ஒரு சிக்சர்) விளாசிய ஜோ ரூட் கடைசி பந்தில் ரன் - அவுட் ஆனார்.

50 ஓவர் முடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 322 ஓட்டங்கள் குவித்தது. கடைசி 8 ஓவர்களில் மட்டும் அவர்கள் 82 ஓட்டங்களைத் திரட்டினர். முதல் முறையாக அரைசதம் கண்ட டேவிட் வில்லி 50 ஓட்டங்களுடன் (31 பந்து, 5 பவுண்டரி, ஒரு சிக்சர்) களத்தில் இருந்தார். இந்திய தரப்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளும், சாஹல், ஹர்திக் பாண்ட்யா, உமேஷ் யாதவ் தலா ஒரு விக் கெட்டும் கைப்பற்றினர்.





பின்னர் கடின இலக்கை நோக்கி விளையாடிய இந்திய துடுப்பாட்ட வீரர்கள், இங்கிலாந்தின் பந்து வீச்சை நொறுக்க முடியாமல் திண்டாடினர். 50 ஓவர்கள் முழுமையாக ஆடிய இந்திய அணி 236 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக சுரேஷ் ரெய்னா 46 ஓட்டங்களும் (63 பந்து), அணித்தலைவர் விராட் கோஹ்லி 45 ஓட்டங்களும் (56 பந்து), டோனி 37 ஓட்டங்களும் (59 பந்து), ஷிகர் தவான் 36 ஓட்டங்களும் (30 பந்து, 6 பவுண்டரி) எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் பிளங்கெட் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

86ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்ட இங்கிலாந்து அணி இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 1–1 என்ற கணக்கில் சமனுக்கு கொண்டு வந்தது. அத்துடன் தரவரிசையில் 'நம்பர் ஒன்' இடத்தையும் தக்க வைத்துக் கொண்டது. கடைசி ஒரு நாள் போட்டி நாளை லீட்சில் நடக்கிறது.

# உலகக் கிண்ணத்தை வென்றது பிரான்ஸ்!









### வீதிப் போக்குவரத்துக்கான புதிய விதிமுறைகளின்படி

## புகைப்பரிசோதனைச் சான்றிதழ் இல்லாவிடினும் ரூ. 500 தண்டம்

கொழும்பு, ஜூலை 16

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறும் 33 தவறுகளுக்காகச் சம்பவ இடத்திலேயே விதிக்கப்படும் தண்டப் பணம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் அதிகரிக்கப்படுகின்றன.

வாகானப் புகைப் பரிசோதனைச் சான்றிதழை எடுத்துச் செல்லத் தவறினால் 500 ரூபா தண்டப் பணம் அறவிடப்படும் என்ற புதிய போக்குவரத்து விதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை அந்தச் சான்றிதழ் வாகன வரி அனுமதிப் பத்திரம் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் அதனை போக்குவரத்தின்போது பயன்படுத்தவேண்டும் என்ற கட்டாயம் தற்போது கொண்டுவரப்பட்டுள்ளது.

அதிவேக சாரத்தியத்துக்கு இதுவரை ஆயிரம் ரூபா விதிக்கப்பட்ட தண்டம் நேற்று முதல் 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைவாக வாகன சாரத்தியத்துவத்தில் விடும் தவறுகள் தொடர்பாகக் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி அதிசிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த வர்த்தமானி அறிவிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வருகிறது. இதுவரை அதே இடத்தில் விதிக்கப்படும் தண்டப் பணம் அறவீடு 23 வாகனத் தவறுகளுக்காக மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் சில நீக்கப்பட்டு மேலும் பல புதிததாக இணைக்கப்பட்டு தற்போது 33 தவறுகளை உள்ளடக்கும் வகையில் அது செயற்படுகின்றது.

இதற்கமைவாக இந்தத் தண்டப்பணம் 30 தொடக்கம் 50 சதவீதம் வரையாக அதிகரிக்கப்படுள்ளது.

அதிக வேகத்துடன் வாகனத்தைச் செலுத்துவதற்கான தண்டப் பணம் 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் உத்தரவுகளுக்குச் செவிமடுக்காமல் செயல்படும் சாரதிகளுக்குத் தண்டப்பணம் 2 ஆரயிரம் ரூபாவாகவும், ஆலோசனை அனுமதிப் பத்திரம் அல்லாமல் ஆலோசனைப் பணிகளில் ஈடுபடுவதற்கான குற்றச் செயல்களுக்கு ரூபா 2 ஆயிரம் என்ற ரீதியில் அதே இடத்தில் விதிக்கப்படும் தண்டப்பணம் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 489 பொலிஸ் நிலையங்களுக்குப் புதிய தண்டனை விதிப்பு தொடர்பான குற்றச்சாட்டு அடங்கிய விவர ஆவணம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக வாகன போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

(மற்றொரு விரிவான செய்தி 07 ஆம் பக்கத்தில்)

## ரூ. 1 கோடி 70 லட்சம் பெறுமதி ஹெரோயின் நேற்று மீட்பு



சேருநுவர பிரதேசத்தில் ஒரு கோடி எழுபது லட்சம் ரூபா பெறுமதியான ஐந்து ஹெரோயின் பொதிகள் மீட்கப்பட்டுள்ளள எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஹெரோயின் பொதிகள் ஐந்தும் சீனன்வெளி கடல் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

1.416 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொதிகளே நேற்று மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சட்டத்தரணிகளின் உதவியாளரான பெண்ணின் மீது கடும் தாக்குதல்




வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அருகில், நேற்றுமுன்தினம் பெண் ஒருவர் மீதும் அவரது மகன் மீதும் இனந்தெரியாத நபர்களால், தாக்குதல் நடத்தப்பட்டது. வட்டுக்கோட்டை – சங்கரத்தைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் மற்றும் அவரது 6 வயது மகன் மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தப் பெண், நாவற்குழியில் இராணுவத்தினரால்கைதுசெய்யப்பட்டு காணாமலாக்கப்பட்ட 24 இளைஞர்கள் தொடர்பிலான, ஆள்கொணர்வு மனு மீதான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளின் உதவியாளராவார்.

அந்தப் பெண், நேற்று முன்தினம் தனது மகனுடன் வட்டுக்கோட்டை – கோட்டைக்காடு வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பும் போது, இனந்தெரியாத கும்பலொன்று அவர்களை வழிமறித்து, இரும்புக் கம்பிகளைக்கொண்டு தாக்கியுள்ளது. தலையில் படுகாயமடைந்தப் பெண், அவ்விடத்தில் மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து, தாக்குதல் மேற்கொண்ட குழுவினர் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

இதன் பின்னர், வீதியில் வந்தவர்கள் மயக்கமடைந்திருந்த பெண்ணையும் காயங்களுக்கு உள்ளான அவரது மகனையும் மீட்டு, கோட்டைக் காடு வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதையடுத்து, அந்தப் பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

## சிறைக்கைதி தற்கொலை

கொழும்பு, ஜூலை 16

கம்பளை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துள்ளார் எனக் கம்பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் 23 வயதுடையவர் எனவும் புஸல்லாவைப் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே கைதானவர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

இவர் தனது ஆடைகளை பயன்படுத்தியே தற்கொலை செய்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### போதைப் பொருளைக் கட்டுப்படுத்த

## இராணுவம், பொலிஸில் விசேட படை அணிகள்

போதைப்பொருள் வியாபாரத்தை ஒடுக்குவதற்காக இராணுவம், விசேடபடையணி ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்தி, போதைப்பொருள் வர்த்தகத்தை ஒடுக்குவதற்கு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, போதைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரின் விசேட பிரிவொன்று உருவாக்கப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் தெரிவித்துள்ளார். இந்தப் பிரிவு ஈ.ஆர்.டி எனும் பெயரில் உருவாக்கப்படவுள்ளது.

## மக்களைத் திசை திருப்பவே தூக்கு மேடை நாடகமாம்!

### அரசைச் சாடுகிறார் பஸில்

கொழும்பு, ஜூலை 16

மக்கள் தங்களுக்கு அதிகாரத்தை மீள வழங்குவார்களாக இருந்தால், எதிர்வரும் ஐந்து வருட காலத்துக்குள் சட்டத்தை மதிக்கும் ஒரு சமூகத்தை தாங்கள் உருவாக்கிக் காட்டுவார்கள் என முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

இன்று மக்களுக்கு தூக்குத் தண்டனையல்ல பிரச்சினை. பொது மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தொடர்பான பிரச்சினையைத் திசை திருப்ப அரசாங்கம் முன்னெடுக்கும் நாடகமே இந்த தூக்குத் தண்டனை நடவடிக்கை.

நாம் எமக்கு அதிகாரம் கிடைத்தால் தூக்கு மேடை அமைக்க மாட்டோம். பாடசாலை, விகாரை, கோவில், பள்ளிவாசல் என்பன அமைப்போம். இந்த சமூக அமைப்பின் ஊடாக சட்டத்தை மதிக்கும் மக்களை உருவாக்குவோம். – எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.